விலை சதம்: 25 தொலைபேசி: 23411

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2002, ஆவணி 13 உ (29-8-71) ஞாயிறு றஜபு பிறை 7 புத்தகம் 25 இதழ் 40

# தமிழரசு கூட்டங்களுக்கு அனுமதி மறுப்பு!

அரசியல் பிரசாரக்கூட்டங்களை நடத்தக் கூடாதென்று அரசாங்கம் தமிழரசுக் கட்சிக்கு வாய்ப்பூட்டு போட்டிருக்கிறது.

அரசியல் நிர்ணய சபையை பகிஷ்கரிப்பதற்கான காரணங்களை மக்களிடம் விளக்குவதற்காக தமிழ் பிரதேசங்களில் பிரசாரக் கூட்டங்களை நடத்த தமிழரசுக் கட்சி திட்டமிட்டிருந்தது இக்கூட்டங்களை நடத்துவதற்கு தமிழரசுக்கட்சிக்கு

(10ம் பக்கம் பார்க்க)

## டாக்டர் நாகாவின் இறுதி ஊர்வலம்!



தமிழினத்துக்காக தன் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணித்த இரும்பு மனிதர்—ஈழத்துப் பட்டேல்—அமரர் டாக்டர் இ.மு.வி. நாகநாதன் அவர்களின் இறுதி யாத்திரையில் மழையையும் பொருட்படுத்தாது கலந்து கொண்ட பல்லாயிரக் கணக்கான மக்களில் ஒரு பகுதியினரை இங்கே காணலாம்.

## தேர்தல் செய்தி படத்தில் தி. மு. க. வுக்கு இருட்டடிப்பு!

இந்த ஆண்டு மார்ச்சில் நடைபெற்ற இந்தியபொதுத் தேர்தல் பற்றி செய்திப் படமொன்றை இந்திய அரசு வெளியிட்டிருக்கிறது; இச்செய்தித் திரைப் படம் 16. 8. 71ல் இங்குள்ள இந்திய தூதரக அதிகாரி ஒருவரின் வீட்டில் பத்திரிகை நிருபர்களுக்கு போட்டுக் காட்டப்பட்டது;

இச்செய்திப்படத்தில் இந்திரா காந்தி, சவான்,

(11ம் பக்கம் பார்க்க)

## 'விடுதலைக்குப் போராடும் உங்களுக்கு ஈழத்தமிழரின் ஆதரவு என்றுமுண்டு'

### வங்கதேச தூதுக்குழுவுக்கு தந்தை செல்வா வாழ்த்து

"உங்கள் இனத்தின் விடுதலைக்காகவும், உரிமைகளுக்காகவும் மெய்சிலிர்க்கவைக்கும் எத்தனையோ தியாகங்களைப் புரிந்து போராடிவருகிறீர்கள்; நீதி நியாயத்துக்காக நீங்கள் போராடுகிறீர்கள். உங்கள் வங்க தேசத்து மக்கள் தங்கள் பிறப்புரிமைகளுக்காக சிந்தும், வியர்வையும் கண்ணீரும், இரத்தமும் ஒரு போதுமே அவம் போகாது. தர்மம் ஒரு நாள் வெற்றிபெற்றே தீரும். உங்கள் விடுதலைப்போராட்டத்துக்கு இலங்கை வாழ் 35 இலட்சம் தமிழ் பேசும் மக்களினதும், இலங்கைத் தமிழரசுக் கட்சியினதும் பூரண ஆதரவும், ஒத்துழைப்பும் உண்டு. எங்கள் தார்மீக ஆதரவை உங்களுக்கு எப்பொழுதும் தருவோம். உங்கள் பிரச்சினைகளை நாடாளுமன்றத்திலும் எடுத்துரைத்து இலங்கை அரசின் ஆதரவையும் உங்கள் பக்கம் திருப்ப முயற்சிப்போம்''—

—இவ்வாறு தம்மை அண்மையில் சந்தித்த வங்க தேசத்து பிரதிநிதிகளிடம் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் அவர்கள் எடுத்துரைத்தார்;

ஷேக்முஜிபுர் ரகுமானைத் தலைவராகக்கொண்ட 'அவாமிலீக்' கட்சியின் பிரதிநிதிகள் இருவர் வங்க விடுதலைப்போருக்கு இலங்கையின் ஆதரவைத் திரட்டுவதற்கென அண்மையில் ஈழம் வந்திருந்தனர். அவர்கள் இங்கு வந்ததும் முதன் முதலாகச் சந்தித்துப்பேசியது தமிழரசுத் தந்தையைத்தான். 11. 8. 71 அன்று தமிழரசுத் தந்தையின் வீட்டில் இச்சந்திப்பு நடைபெற்றது. இச்சந்திப்பின்போது உடுவில் பா.உ. திரு. வி. தர்மலிங்கம், மூதவை உறுப்பினர் சு. நடராசா ஆகியோரும் உடனிருந்தனர்;

இலங்கையில் தங்களுக்காக முதன் முதல் குரலெழுப்பிய ஒரே அரசியல் கட்சி இலங்கைத் தமிழரசுக்கட்சியென்

(11ம் பக்கம் பார்க்க)



## தலைநகரில் பங்ளா தேஷ் ஆதரவு ஆர்ப்பாட்டம்!

கொழும்பில் வங்காள தேசத்துக்கு ஆதரவாக இவ்வாரம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. வங்காள மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தின்போது பாகிஸ்தானின் மிருகத்தனமான இனக்கொலையை கடுமையாகக் கண்டிக்கும் துண்டுப்

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# எண்ணம்

## தமிழ் அர்ச்சனை

தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி ஏற்பட்ட பின்னரே தமிழ்மொழிக்கு பெருமை மிகு பொற்காலம் மீண்டும் தோன்றியுள்ளது என்பதை மொழியுணர்ச்சிகொண்ட எந்தத் தமிழனும் மறுக்க முடியாது.

அரசியல் துறையிலும் சரி, ஏனைய துறைகளிலும் சரி தமிழுக்கு முதன்மையும் மதிப்பும் கழக ஆட்சியின் கீழேயே கிடைத்து வருகிறது. தமிழ் புலவர்களுக்கும் தமிழ்கற்ற சான்றோர்களுக்கும் கழக ஆட்சியே பெருமை மிகு இடத்தையளித்து வருகிறது. எங்கும் தமிழ் எல்லாம் தமிழ் என்ற நிலையை தமிழகத்தில் கழக ஆட்சி ஏற்படுத்தி வருகிறது. ஆட்சித்துறையிலும், கல்வித் துறையிலும், நீதித்துறையிலும், தமிழுக்கு முதலிடம் என்ற பெருமை மிகு நிலையை தமிழ்நாட்டு அரசு உண்டாக்கிவருகிறது. தமிழுக்கு கிடைக்கும் இந்த உயர் நிலை கண்டு குதூகலத்தால் மகிழ்ந்து கூத்தாடாத தமிழன் எவனுமே இருக்கமுடியாது.

சுருக்கமாகக் கூறினல் — தமிழின் பொற்காலம்— தமிழர்களின் பொற்காலம்—கழக அரசின் கீழ் மெல்ல மெல்ல — ஆனல் உறுதியாக — திரும்பிக்கொண்டிருக்கிறது.

எங்கும் தமிழ்—எல்லாம் தமிழ் என்ற கொள்கையின் ஓரம்சமாக, தமிழ் நாட்டில் உள்ள இந்து ஆலயங்களில் தமிழ் அர்ச்சனை முறையை தமிழக அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. தமிழகத்தில் உள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட பழம்பெரும் ஆலயங்களில் இப்போது தமிழ் அர்ச்சனை முறை துவக்கிவைக்கப்பட்டிருக்கிறது.

தமிழக அரசு தான்தோன்றித்தனமாக — சர்வாதிகார ரீதியில் தமிழ்நாட்டு கோவில்களில் தமிழ் அர்ச்சனை முறையை திணிக்கவில்லை. தவத்திரு. குன்றக்குடி அடிகளார், திருமுருக கிருபானந்தவாரியார் போன்ற சிவானுபூதிச் செல்வர்களின் கருத்தறிந்து அவர்களின் சம்மதத்துடனேயே தமிழ் அர்ச்சனை முறையை ஏற்படுத்தியிருக்கிறது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருமுருக கிருபானந்தவாரியார்போன்ற சைவ உலகப்பெருமக்களே பல ஆலயங்களில் தமிழ் அர்ச்சனை முறையை ஆரம்பித்துவைத்து வருகிறார்கள்.

தமிழ் அர்ச்சனை முறையை எதிர்க்கவும் சிலர் கச்சைகட்டிக்கொண்டு கிளம்பியிருக்கிறார்கள். இவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை தமிழ் நாட்டு மக்கள் நன்கு அறிவர். தமிழுக்கு பெருமையும் உரிமையும் கிடைப்பதை அறவே விரும்பாத தமிழ் பகைவர்கள் இவர்கள். தமிழர்களாகவே பிறந்து தமிழுக்கு கொள்ளி வைப்பவர்கள் இவர்கள்.

தமிழக அரசு தமிழ் அர்ச்சனை முறையை தமிழ் நாட்டு ஆலயங்களில் தொடக்கிவைக்கும் நேரத்தில் இருவிடயங்களை ஐயத்துக்கிடமின்றித் தெளிவுபடுத்தியிருக்கிறது.

(1) தமிழில் மட்டும்தான் அர்ச்சனை நடைபெற வேண்டும் அல்லது பக்தர்கள் எல்லோரும் தமிழில் தான் அர்ச்சனை செய்விக்கவேண்டும்; என்கின்ற கட்டாயம் எதுவும் கிடையாது. தமிழில் அர்ச்சனை செய்விக்க விரும்புபவர்கள் அப்படியே செய்விக்க வசதி செய்யப்பட்டிருக்கும் அதேநேரத்தில், இப்போதுள்ளது போல வடமொழியிலேயே அர்ச்சனை செய்விக்கவேண்டும் என்று விரும்புகின்ற பக்தர்கள் அப்படியே செய்விக்கலாம். அதற்கு—அதாவது—வடமொழி அர்ச்சனைக்கு ஆலயங்களில் தடை ஏதும் விதிக்கப்படவில்லை.

(2) தமிழில் அர்ச்சனை செய்வதற்கு புதிதாக மந்திரங்கள் எதுவும் புனையப்படவில்லை; ஏற்கெனவே சைவ மதக்குரவர்களால் இறைவன்மீது பாடப்பட்ட தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருப்புகழ் போன்ற திருமறைகளைப் பயன்படுத்தியே தமிழ் அர்ச்சனை செய்யப்படுகிறது.

மேற்கண்ட இந்த இரண்டு விளக்கங்களின் பின்னும் தமிழ் அர்ச்சனை ஏற்பாட்டை எதிர்ப்பதற்கு எவ்வித நியாயமான காரணங்களையும் நம்மால் காண முடியவில்லை. இதன் பின்னும் தமிழ் அர்ச்சனையை சிலர் எதிர்க்கிறார்கள என்றால் அவர்கள் தமிழின் எதிரிகள் என்பதைத்தவிர வேறு கூறுவதற்கு எதுவுமில்லை.

தமிழ் அர்ச்சனைமுறை ஏதோ புதியதொருமுறையன்று. மணிவாசகரும், அப்பரும், சுந்தரரும், நாவுக்கரசரும், அகத்தியரும், அருணகிரியும், திருமூலரும், மற்றும் அடியார்களும் இறைவனை நோக்கி தமிழில் தான் பாமாலைசூடி பக்தி செலுத்தியிருக்கிறார்கள்.

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் பக்திப் பாடலாம் திருவாசகம் கொண்டு மணிவாசகர் தமிழில் தான் இறைவனை அர்ச்சித்தார். இறைவனே தன்மீது தமிழிற் பாடும்படி நாயன்மார்களுக்கு கட்டளையிட்டதாக பெரிய புராணம் கூறுகிறது. 'செந்தமிழால் வைதாரையும் இங்குவாழவைப்பவன்' என்று இறைவனைப் போற்றுகின்றன சைவ திருமறைகள்.

செந்தமிழால்வைதாரையும் வாழவைக்கும் இறைவனுக்கு செந்தமிழால் அர்ச்சிக்கக்கூடாதென்பது எவ்வளவு பேதமை?

சைவ ஆலயங்களில் தமிழிலும் அர்ச்சனை நடைபெறவேண்டும் என்ற சைவத்தமிழ் மக்களின் நீண்டநாள் ஆசையை நிறைவேற்றிவரும் தமிழக அரசையும் அதற்கு ஒத்துழைப்பு நல்கும் தவத்திரு அடிகளார், கிருபானந்தவாரியார் போன்ற சைவப்பெரியார்களையும் உளமார வாழ்த்துகிறோம்!

ஈழத்தமிழகமும், இதுவிஷயத்தில் தமிழ்நாட்டைப் பின்பற்றவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

# 'அலி' சங்க கூட்ட நடவடிக்கைகள் யாவும் தனிச் சிங்களத்தில்!

## அவதிப்பட்டனர் தமிழ் உறுப்பினர்கள்!

அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் கணக்காய்வுத் திணைக்கள கிளைக் கூட்டம் அண்மையில் அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தில் நடைபெற்றபோது, அக்கூட்டத்தில் கலந்து கொண்டதமிழ் ஊழியர்கள், சிதம்பர சக்கரத்தை பேய் பார்த்தது போல் ஒன்றும் புரியாமல் பேந்தப் பேந்த விழித்தார்களாம்.

இதற்குக் காரணம் இச் சங்கத்தின் கூட்ட நடவடிக்கைகள் அனைத்தும் தனிச் சிங்களத்திலேயே நடைபெற்றதுதான். தங்கள் சங்கத்தில் தமிழ் ஊழியர்கள் இருக்கிறார்களே என்பதை யிட்டு கொஞ்சம் கூட சிந்திக்காது இனவெறியுடன் கூட்ட நடவடிக்கைகளை 'அலி' சங்கம் தனிச்சிங்களத்தில் நடத்தியிருக்கிறது.

கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த தமிழ் ஊழியர்கள் சிறிது நேரத்தில் அங்கிருந்து மெதுவாக நழுவி விட்டார்களாம். இதுபற்றி அ. எ. வி. சங்கத்தைச் சேர்ந்த தமிழ் ஊழியர் ஒருவர் குறிப்பிடுகையில் "இவற்றையெல்லாம் உணர்ந்துதான் மொழியடிப் படையில் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கென அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் இயங்குகிறது. தமிழ் ஊழியர்கள் மானம் கெட்டு இனியும் அலி சங்கத்தில் இருப்பதை விட்டு அ. எ. வி. சங்கத்தில் சேர முன் வரவேண்டும்" என்று கூறினார்.

# நாகா எதற்காகப் போரிட்டாரோ அந்தப்போராட்டம் மேலும் தொடரும்!

## நாடாளுமன்றத்தில் தமிழரசுத் தந்தை!

நல்லூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகப் பத்து ஆண்டுகள் பணியாற்றிய டாக்டர் இ. மு. வி. நாகநாதன் அவர்களின் மறைவுக்கு அவரது சடலம் இறுதி ஊர்வலமாக எடுத்துச்சென்று அடக்கம் செய்யப்படுமுன்பே (19-8-71ல்) நாடாளுமன்றம் அனுதாபம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது. அனுதாபத் தீர்மானத்தை நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா கொண்டுவந்தார், தீர்மானத்தை வழிமொழிந்து தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம், வி. என். நவரத்தினம், ஆனந்தசங்கரி ஆகியோர் பேசினர். தமிழரசுத் தந்தை அவர்கள் அதுபோது நிகழ்த்திய உரை இங்கு தரப்படுகிறது.

"சபாநாயகரவர்களே,

"டாக்டர் இ. மு. வி. நாகநாதன் அவர்களின் மரணம் குறித்து இச்சபை நிறைவேற்ற உத்தேசித்திருக்கும் இரங்கல் தீர்மானத்தில். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் நானும் இணைந்துகொள்ளுகிறேன்.

"இந்தச் சபையிலிருக்கும் எல்லோரையும்விட டாக்டர் நாகநாதனை நீண்டகாலமாக அறிந்தவன் நான் ஒருவனே. விக்டர் ஹென்ஸ்மன் (அப்போது இப்படித்தான் அவர் அழைக்கப்படுவார்) என்ற பெயருடன் இளம் பையனாக சுண்டிக்குளி சென்-ஜோன்ஸ் கல்லூரியில் அவர் படிக்க வந்த 1912 அல்லது 1913ம் ஆண்டிலிருந்து அவரை நான் அறிவேன். யாழ்ப்பாணத்தில் நல்ல ஞானதிசயங்களுக்கு பெயர் பெற்ற ஹென்ஸ்மன் குடும்பத்தைச் சேர்ந்தவர் அவர்.

"டாக்டர் நாகநாதன் பலதுறையிலும் ஈடுபாடுள்ளவர். அவர் திறமைமிக்க விளையாட்டு வீரர். ஒரு சிறந்த வைத்தியர் ஒடுக்கப்படும் மக்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்காகப் போராடும் ஒப்பற்ற அரசியல் வீரர். இலண்டனிலிருந்தபோது அகில இந்திய ஹொக்கி விளையாட்டுக் குழுவின் சார்பில் விளையாடினார். கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகங்களுக்கு எதிராக அனைத்து இங்கிலாந்து வைத்தியசாலைகளின் சார்பில் 'றகர்' விளையாடியவர்.

"அவர் ஒரு இராசியுள்ள டாக்டர். டாக்டர் தொழிலில் அவருக்கு நிறைய வருமானம் இருந்தது. தனது மக்களுக்காகப் போராடுவதற்காக அரசியலில் ஈடுபட்டு வருமானங்களையெல்லாம் தியாகம் செய்தவர் அவர்.

"அவர் [illegible] போராட்ட வீரர். அடக்குமுறையாளர்களை எதிர்த்து அடக்கப்படும் மக்களின் பக்கம்எப்பொழுதும் இருந்தவர் அவர். இலண்டனில் அவர் இருக்கும்போது ஸ்பானிஷ் அரசாங்கத்தை எதிர்த்து 'றிவ்ஸ்' மக்களுக்காக போராடுவதற்கா பல்கலைக் கழக மாணவர் குழு ஒன்று முடிவு செய்தது. அந்தக்குழுவில் நாகநாதனும் ஒருவராக இருந்தார். போராட்டத்தில் அவர் காயப்பட்டார். கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டார் பின்னர் ஸ்பானிஷ் தூதுவரின் தலையீட்டினல் மிகப் பெரும் ஆபத்துக்களிலிருந்து தப்பினர்.

"எங்கு ஒடுக்கப்பட்ட மக்கள் தமது விடுதலைக்காக போராடுகிறார்களோ அங்கு டாக்டர் நாகநாதன் நிச்சயமாகக் காணப்படுவார். இலங்கைக்கு அவர் திரும்பிய போது, இங்கு தமது மக்கள் தமது உரிமைகளுக்கும் சுதந்திரத்துக்கும் போராடவேண்டிய சூழ்நிலையிலிருப்பதை கண்டதும், இலங்கைத் தமிழ் மக்களின் சார்பில் நடைபெறும் விடுதலை இயக்கத்தினுல் அவர் ஈர்க்கப்பட்டதில் ஆச்சரியமெதுவுமில்லை. இலங்கையில் தமிழினம் சிறுபான்மையினமாகஇருந்தாலும், டாக்டர்நாகநாதன்போன்றவீரர்களை உருவாக்கியதனலேயே தமிழ் மக்கள் இன்று ஓரளவு மானத்துடன் வாழக்கூடியதாக இருக்கிறது.

"அவரது இழப்பு எனக்கு தனிப்பட்ட முறையில் பெரிய நட்டம். நான், திரு. வன்னியசிங்கம், வீ. ஏ. கந்தையா, இராஜவரோதயம், டாக்டர் நாகநாதன் ஆகியோரை இழந்து விட்டேன். என்றாலும் எங்கள் போராட்டம் மேலும் தொடரும். அநீதிகள் அகலும்வரை எமது போராட்டம் நீடிக்கவே செய்யும்.

"டாக்டர் நாகநாதன் உண்மைத் தோழர். சிறந்த தொண்டர். அவருடன் கூட பணிபுரிவது மகிழ்ச்சிகரமானது. யாராலும் அடக்கப்பட முடியாத அவர், தானே ஒரு கட்டுப்பாட்டுக்குள் வந்து, அஹிம்சைக் கொள்கையை கடைப்பிடித்தார். ஒரு நாள் மாலை என்னைத்தாக்கி விட்டார். நானும் திருப்பித் தாக்கிவிட்டேன். அந்த இரவு கழியுமுன், நாங்கள் யாருக்காக பணியாற்றுகிறோமோ அந்த மக்களின் நன்மையை உத்தேசித்து அச்சம்பவத்தை மறந்துவிட்டார். எங்கள் கட்சியின் ஏனைய உறுப்பினர்களுடன் தடுப்புக் காவலில் அவரும் வைக்கப்பட்டார்.

"இந்த அனுதாப நிகழ்ச்சியின் அறிக்கையை அவரது விதவை மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் அனுப்பி வைக்கும்படி ஏனையோருடன் சேர்ந்து நானும் கேட்டுக்கொள்கின்றேன்."

—(19-8-71ல் நாடாளுமன்றத்தில் பேசியது)

## நன்றி நவிலல்

திருமதி சே. இரத்தினபூபதி நாகநாதன் அவரது பிள்ளைகள், திருமதி எச். சி. உலகசேகரம் ஆகியோர், காலம்சென்ற டாக்டர் இ. மு. வி. நாகநாதன் அவர்களின் மரணச்சடங்குகளின்போது சோகத்தை தணிக்கும் நோக்குடன்நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர் வளையங்கள் அனுப்பியவர்களுக்கும், பரிவுச் செய்தி அனுப்பியவர்களுக்கும், ஆறுதல் வழங்கியவர்களுக்கும் தங்களது ஆழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே நன்றி நவில இயலாமை குறித்துவருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

26 அல்பிரட் இடம்,
கொழும்பு3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மேடை

அன்பு நண்பா,

"அப்போது மாலை மணி ஐந்திருக்கும்—350, அல்லது 400 பாகிஸ்தானிய பட்டாளத்தினர் அந்த மண்டபத்தை சுற்றி வளைத்துத் தாக்கும் போது, அவர்கள் மாணவிகள் இருக்கும் எல்லா அறைகளுக்குள்ளும் திடுதிடுமென நுழைந்தார்கள். ஒவ்வொரு மாணவியாக தரதரவென்று மிருகத்தனமாக வெளியே இழுத்துச்சென்றூர்கள்.

"எங்கும் ஒரே கிலி; கூச்சல் சத்தம்; சேலைகள், பாவாடைகள், மேல் துண்டுகள், ரவிக்கைகள், மார்புக் கச்சைகள் எங்கும் கிழித்து வீசப்பட்டன. கூந்தலிலும், மார்புகளிலும் கூட பிடித்து அம் மாணவிகளைத் தூக்கி வீசினர்கள். சிலரைத் தலைகீழாகத் தூக்கிப் பந்தாடினர்கள்.

"அம்மாணவிகள் தங்கள் மானத்தை கை கொண்டு மறைக்க முயன்றபோது, அவர்களது அந்தரங்க இடங்களை சப்பாத்துக் கால்களினால் உதைத்தார்கள். சிலர் தங்கள் துப்பாக்கிக் கத்திகளைப் பாய்ச்சி அவ்விடங்களிலிருந்து இரத்தம் பெருகுவதுகண்டு குதூகலித்தனர்.

"அடுத்து நடந்தது கற்பழிப்பு......! கல்வி கற்க வந்திருந்த இந்த இளமொட்டுகள்—சின்னஞ்சிறிசுகள்—கதறினூர்கள்: கடும் கூச்சலிட்டார்கள். போராடினூர்கள்....ஆயினும் வல்லூறுகளின் முன்னால் புருக்கள் என்ன செய்யும்? ஒவ்வொரு மாணவியும் மாறி மாறி 10 அல்லது 12 இராணுவ மிருகங்களால் சூறையாடப்பட்டாள். அநேகர் மூர்ச்சித்து அறிவிழந்து வீழ்ந்தனர்; தங்கள் காட்டுமிராண்டி ஆசையைமுடித்துக்கொண்டதும் இராணுவத்தினர் அங்கிருந்து அகன்றனர்.

"தங்கள் உடம்பைக்கூட மூடிக்கொள்ள முடியாத நிலையில் அப்பெண்கள் இருந்தனர். மார்புகள் பிய்த்தெறியப்பட்டும், பெண்மைக்கே யுரிய இடங்கள் சகிக்கமுடியாத அளவுக்கு காயப்படுத்தப்பட்டும் காணப்பட்டார்கள். இந்த மிருகத்தனத்தை எதிர்த்து போராட முயன்றவர்கள் சிலர் கழுத்து நெரிக்கப்பட்டுக் கிடந்தனர்.

"இந்தக் காட்டுமிராண்டிகளின் கையில் சிக்குவதைவிட உயிரை விடுவதுமேல் என்று முடிவுக்கு வந்த 50 துணிச்சல்காரப் பெண்கள், மாடியிலிருந்து குதித்து உயிரை மாய்த்துக் கொண்டார்கள்.

"அக் கல்லூரியில் பயிலும் மாணவியைப் பார்க்க வந்திருந்த பன்னிரெண்டே பன்னிரெண்டு வயது நிரம்பிய ஒரு சின்னஞ் சிறுமியைக்கூட அந்த மிருகங்கள் விட்டு வைக்கவில்லை. அச்சிறுமி இறக்கும்வரை அவள்மீது பலவந்தம் செய்தார்கள்.

"டாக்காவிலுள்ள பெண்கள்மீதும், குழந்தைகள்மீதும் பாகிஸ்தானிய இராணுவம் நடத்திய ஒரு டசனுக்கு மேற்பட்ட மிலேச்சத்தனமான கொடுமைகளில் இதுவும் ஒன்று! இந்த விபரங்களையெல்லாம் எனது நண்பர் ஒருவரிடமிருந்து தெரிந்து கொண்டேன். அவர் பாகிஸ்தானுக்கு விசுவாசமுள்ள ஒரு பிரஜை. ஆனல் பாகிஸ்தான் இராணுவத்தின் கொடுமைக்கு பலியானவர்களில் அவரின் மகளும் ஒருவர். அதன்பின் பாகிஸ்தான் இராணுவத்தைப் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்று அவர் துடிதுடிக்கிருர்."

—நினைத்திடவே நெஞ்சு பதறும் இக்கொடூரம் — காட்டுமிராண்டித்தனம் — மிலேச்சத்தனம்—டாக்கா பல்கலைக்கழகத்தின் ருக்கி மண்டபத்தில் நிகழ்ந்திருக்கிறது. இந்த மிருக வெறியாட்டத்தை நடத்தி முடித்தவர்கள் பாகிஸ்தான் இராணுவத்தினர்; யெஹியாவின் கையாட்கள்!

—இத்தகவலை கிழக்கு பாகிஸ்தானிலிருந்து இந்த ஆண்டு ஏப்ரல் 2ம் நாள் பிரிட்டனுக்கு பறந்து சென்ற திரு. ஏ. சண்டேர்ஸ் என்ற பிரிட்டிஷ் வர்த்தகர் தெரிவித்திருக்கிருர்!

ஆம் நண்பா, வங்கதேசத்து மக்கள் விடுதலை கேட்டதற்கு கிடைத்திட்ட பரிசு தான் இதெல்லாம்; சுயநிர்ணய உரிமை கேட்டதற்கு தரப்படும் சொல்லொணுக் கொடுமை இது! வங்கமொழியின் உரிமையைக் கேட்டதற்காக தங்க நிகர் மாதர்கள் தருக்கர்களால் வேட்டையாடப்பட்ட சோக வரலாற்றில் ஒரு துளி இது!

தாயின் அரவணைப்பில் பாலூட்டியபடி சிரித்து விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகள்—அக்குழந்தைகளின் சிரிப்பில் தம்மையே மறந்து மகிழ்ந்துகொண்டிருந்த வங்க நாட்டு அன்னையர்கள்—எத்தனை எத்தனை பேரை பாகிஸ்தான் இராணுவத்தின் பயங்கர துப்பாக்கிகள் பலி எடுத்ததோ?

கார் ஓட்டிக்கொண்டிருந்த சாரதிகள்—ஏரோட்டிக் கொண்டிருந்த உழவர்கள்—எத்தனை எத்தனை பேர் அப்படியே சுட்டுக்கொல்லப்பட்டார்களோ!

காதலியின் கன்னக்கதுப்பில் தம்மை மறந்திருந்த காளையர்கள்—காதலரின் அரவணைப்பில் உலகையே மறந்திருந்த மங்கையர்கள் — எத்தனை எத்தனை பேர் பாகிஸ்தானத்து காட்டெருமைகளின் தாக்குதலுக்கு இரையானுர்களோ?

றிக்ஷா இழுத்திடும் தொழிலாளர்கள் — சமையலில் ஈடுபட்டிருந்த அன்னையர்— வேலைக்குச் சென்று கொண்டிருந்தோர்— வேலையிலீடுபட்டிருந்தோர் — வேலையிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தோர் — மசூதியில், கோவில்களில் தேவாலயங்களில் பிரார்த்தனைகளில் ஈடுபட்டிருந்தோர்—எத்தனை எத்தனை பேரோ ...? அவர்கள் எல்லாம் அப்படி அப்படியே துப்பாக்கி ரவைகளால் வேட்டையாடப் பட்டிருக்கிருர்கள்!

## 'ஜெய்

உலகிலே எங்குமே நடைபெருத கொடுமை இது; இந்தக்கொடுமைகளை வர்ணிப்பதற்கு உலகில் எந்த மொழியிலுமே வார்த்தைகள் கிடைக்கும் என்று நான் நம்பவில்லை!

அயலவனை உன் சகோதரனுக நேசி; என்று அன்பையே உபதேசித்த நபிகள் நாயகம் அவர்களின் உபதேசங்களைப் பின்பற்றும் ஒரு நாட்டில் மனிதத்தன்மைக்கே பஞ்சம் ஏற்பட்டுவிட்டதா? பாகிஸ்தானத்து வெறியன் — யெஹியா கானின் செயலை எதிர்த்து இஸ்லாமியன் ஒவ்வொருவனும் குரல் கொடுத்திட வேண்டுமல்லவா?

வங்க தேசத்து மக்கள் எதற்காக இந்தக் கொடுமைகளை யெல்லாம் தாங்கிக் கொண்டிருக்கிருர்கள்? தங்கள் இனத்தின்—மொழியின்

## பங்ளா

—நாட்டின் விடுதலைக்காக! சுதந்திரத்துக்காக! சுயநிர்ணய உரிமைக்காக!! இதைத்தான் நமது ஈழத் தமிழகத்து மக்கள் தங்கள் நெஞ்சங்களில் பதித்துக் கொள்ளவேண்டும்!

வங்க தேசத்தில் யெஹியாகானின் வெறியாட்டத்திற்கு பலியானவர்கள் இதுவரை 10 இலட்சம் வங்காளியர்! இன்னும் பலர் தினம் தினம் பசியாலும், பட்டினியாலும் நோயாலும் இறந்து கொண்டிருக்கிருர்கள்!

எழுபது இலட்சம் வங்காள மக்கள் அகதிகளாக வங்க தேசத்தை விட்டு வெளியேறி இந்தியாவுக்குள் அடைக்கலம் புகுந்திருக்கிருர்கள். அவர்களிலும் பலர் நோய் நொடிகளாலும், பட்டினியாலும் செத்துக்கொண்டிருக்கிருர்கள்!

இந்த அகதிகளில் ஒரு பெண் கூறுவது உள்ளத்தையே பிய்த்தெறிவது போன்று இருக்

## தேஷ்'

கிறது! தன் கணவனும் வளர்ந்த பிள்ளைகளும் பார்த்து நிற்க, மூன்று பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் தன்னை கற்பழித்ததாக அவள் கூறியிருக்கிருள்; எவ்வளவு பெரிய கொடுமை இது!

நண்பா, இந்த வங்க அகதிகள் கூறும் சோகக்கதைகள் இரத்தத்தை உறைய வைப்பன; நெஞ்சத்தைப்பிழப்பன; வீடு வாசல்களை, சொத்துக்களை உறவினர்களை இழந்து நடைப்பிணமாக அவர்கள் கூறிடும் கதைகளை படிக்கும்போது கண்ணீர் ஆருக ஓடுகிறது!

தர்மத்தின் புகலிடமாக விளங்கும் இந்திய பூமியே இன்று வங்க அகதிகளை அணைத்து ஆறுதல் கூறி உதவிபுரிந்து வருவதனை நீ அறிவாய்!

இரத்தம், வியர்வை, கண்ணீர்—இம் மூன்றும் தானே விடுதலை வீரர்களுக்கு கிடைத்திடும் பரிசுகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை கஷ்டங்களை அனுபவித்த பின்னும்—இத்தனை தொல்லைகளை ஏற்றுக்கொண்ட பின்னும்—'வங்கதேசம் வங்காளியருக்கே' என்ற அந்த உரிமையுணர்ச்சி, சுதந்திர வேட்கை, விடுதலை ஆவேசம், வங்கதேசத்தவர்களிடம் சற்றும் குறையவில்லை! முஜிபுர் ரகுமான் என்ற பெயரைக்கேட்டவுடன், ஒரு திங்களாக பட்டினி கிடந்தவனும் புது உற்சாகம் அடைகிறுன்! 'வங்காள தேசம் வாழ்க' என்று அவன் வாய் குரல் கொடுக்கிறது! இதுவன்ருே இனஉணர்ச்சி? இதுவன்ருே தேசிய எழுச்சி! இதுவன்ருே மொழிப்பற்று? வங்க நாட்டினரிடமிருந்து ஈழத்தமிழ் மக்கள் பெற்றிட வேண்டிய உணர்ச்சி இதுவன்ருே?

வங்கநாட்டின் தலைமகன், பாகிஸ்தான் இராணுவச்சிறையில்; வங்கத்து மக்களில் பெரும்பாலோர் வேதனையின் மடியில்; இருந்தபோதும், தாங்கள் ஓர் தேசிய இனமாக தொடர்ந்து வாழுவோம் என்கின்ற உறுதிப்பாடு வங்கத்து மக்களிடம் வலுவாக குடிகொண்டிருக்கிறது; இந்த உறுதிப்பாடு அவர்களிடமிருக்கு மட்டும் வங்க நாட்டின் விடுதலையை யாரால் தடுத்திட முடியும்?

நண்பா, வங்காள தேசத்தின் தந்தை ஷேக் முஜிபுர் ரகுமான் அவர்களை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி பாகிஸ்தானத்து இராணுவ ஆட்சி விசாரணை நடத்துகிறதாம். ஜேக் முஜிபுருக்கு எதிரான குற்றச்சாட்டு என்ன தெரியுமா? தேசத்துரோகி, பாகிஸ்தானை பிரிக்கமுயன்றவன் என்பதே குற்றப்பத்திரிகை! விடுதலைக்கு போராடுபவர்களுக்கு ஆதிக்க புரியினர் சூட்டும் பட்டம் இதுபோன்றவை தானே!

உலகத்து நாடுகள் பலவும்—நல்லவர்கள் பல்லோரும்—ஷேக்முஜிபுரை விடுதலை செய்யும்படிகோரியும், ஷேக் மீது விசாரணை ஏதும் நடத்திடவேண்டாம் என்று கோரியும் யெஹியா கானுக்கு விடுத்தவேண்டுகோள்கள் அனைத்தும் வீணுகிவிட்டன! ஏழரைக்கோடி வங்கமக்களின் நரம்பு நாளங்களிலெல்லாம் செறிந்து நிற்கும் அந்த வீரத்தலைவனை மறு உலகம் அனுப்பியே தீருவது என்று முடிவு கட்டி விட்டானே இட்லரின் வாரிசான யெஹியாகான்!

உள்நாட்டு விவகாரம் என்ற போர்வையின்கீழ் விடுதலை கோரிநிற்கும் ஒரு தேசிய இன மக்கள் கொல்லப்படுவதையும், சனநாயகரீதியாக தெரிவு செய்யப்பட்ட அந்த மக்களின் தலைவன் தூக்குகயிற்றினைத் தழுவுவதையும், உலகம் அனுமதிக்கப் போகிறதா?

வங்கமக்களால் முறைப்படி வாக்குச்சீட்டு மூலம் பெரும்பான்மை கட்சியாக தெரிவு செய்யப்பட்ட அவாமி லீக்கை தடைசெய்தது, சனநாயகத்துக்கே விடப்பட்ட ஒரு சவாலன்ருே; முழுப் பாகிஸ்தானின் பிரதமராகவே வரவேண்டிய அளவு பெரும்பான்மை பலம் பெற்ற முஜிபுர் ரகுமானை கைது செய்யவும், விசாரணை நடத்தவும் தண்டிக்கவும் யெஹியாகானுக்கு என்ன அருகதை உண்டு? இந்த மாபெரும் அநீதியைப்பார்த்துக் கொண்டு உலக நாடுகள் கண்ணை மூடிக் கொண்டோ-அல்லது ஒப்புக்காக கண்டன அறிக்கையை விட்டு விட்டோ-மௌனம் சாதிக்கப் போகின்றனவா?

உலகம் உதவிசெய்தாலும் செய்யாவிடினும், தங்கள் சுதந்திரத்தை நிலைநாட்டியே தீர்வது என்று முடிவு செய்துவிட்டார்கள் ஏழரைக் கோடி வங்காள தேசமக்கள். இதோ அவர்களின் தலைவர் முஜிபுர் முழங்குகிருர்;-

"எங்கள் மக்கள், தங்கள் நாட்டை ஒரு கொலனியாகவோ சந்தையாகவோ மேற்கு பாகிஸ்தான் பாவிப்பதற்கு இனிமேலும் இடந்தரப்போவதில்லையென்பதை உலகிற்கு பிரகடனப்படுத்தி விட்டார்கள்; ஒரு சுதந்திர நாட்டின் சுதந்திர மக்களாக வாழுவதில் தமக்குள்ள உறுதியை அவர்கள் நிலைநாட்டி விட்டார்கள்.

"ஆளும் வர்க்கத்தினர் எமது மக்களின் இந்த அபிலாஷைகளை உணர மறுத்தால் விடுதலைபெறுவதற்கான நீண்டகால, விடாப்பிடியானபோராட்டத்துக்கும் எமது மக்கள் தயாராக இருக்கிருர்கள். இந்தப்போராட்டத்தை மிக உறுதியாக நடத்தி விடுதலை என்ற மாபெரும் இலட்சியத்தை அடைவதென்று நாம் சத்தியம் செய்திருக்கிருேம்; விடுதலைக்காக எத்தனையோ தியாகிகள் தங்கள் இரத்தத்தை சிந்தியிருக்கிருர்கள்; எத்தனையோ பேர் தங்கள் உயிரையே அர்ப்பணித்திருக்கிருர்கள்; இத் தியாகிகளின் இரத்தம் வீண் போகாது.

'சுதந்திர வங்காள தேசத்தின் சகோதர சகோதரிகளே, நீங்கள் விடுதலை பெற்ற ஒரு நாட்டின் மக்கள்: மேற்குப் பாகிஸ்தானத்து ஏகாதிபத்தியவாதிகளின் திட்டமிட்ட சதி, நம்பிக்கைத் துரோகம் ஆகியவற்றின் பெறுபேறுதான் சுதந்திர வங்காளம். இன்று வங்காளத் திருநாட்டின்மீது மேற்குப் பாகிஸ்தான் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தி இன ஒழிப்பில் ஈடுபட்டுள்ளனர்: இலட்சக்கணக்கான மக்கள் செத்துக்கொண்டிருக்கிருர்கள். வங்காள தேச மக்களிடமிருந்து அவர்களது சுதந்திரத்தைப் பறிப்பதற்காக காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை பொன்னுடாம் வங்கம்மீது நடத்துகிருர்கள்.

இச்சமயத்தில், எங்கள் சக்திகளை ஒன்ருகத்திரட்டி, எமது போராட்டத்தை வலுவாக்கி, எதிரிகளுக்கு மரண அடி கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

"எங்கள் வெற்றி நிச்சயமானது; அல்லாஹ் எங்களுடன் இருக்கிருர்; உலக அனுதாபம் எங்கள் பக்கம்; "ஜெய் பங்களா"

'ஜெய் பங்களா' என்று நாமும் குரல் கொடுப்போம்!

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

அரசியல் நிர்ணய சபையில் தர்மலிங்கம் — 3.

# 'சிங்களத்துக்கு மட்டும் அரசியல் சட்ட பாதுகாப்பு; தமிழ் மொழியின் நிலை திரிசங்கு சொர்க்கமா? இந்த நிலையை நாம் ஒருபோதும் ஒப்புக்கொள்ளமாட்டோம்'

இன்று உங்களுடைய அடிப்படைத் தீர்மானம் என்ன கூறுகிறது? அடிப்படைத்தீர்மானத்திலே நீங்கள் கூறுகிறீர்கள் இந்த நாட்டினுடைய மொழிக்கொள்கை தனிச் சிங்களச் சட்டத்திலும் தமிழ் உபயோகச் சட்டத்திலும்தான் தங்கியிருக்கும் என்று: இந்த இரண்டு சட்டங்களும் 1958 ஆம் ஆண்டு தொடக்கம் இருந்து வருகின்றன; இந்த இரண்டு சட்டங்களும் எத்தனையோ ஆண்டுகளாக எங்கள் நாட்டில் இருக்கின்றன: அப்படியிருந்தும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவைக் காண முடியாமல் இருக்கிறது.

### சிங்களத்துக்கு மட்டும் பாதுகாப்பு

நீங்களே இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவைக் காணவேண்டுமென்று உங்களுடைய தேர்தல் பிரகடனத்தில் கூறியிருக்கிறீர்கள். ஆனால் எந்த அடிப்படையிலே அந்தத் தீர்வைக்காண வேண்டும் என்பது உங்களுடைய தேர்தல் பிரகடனத்திலே குறிப்பிடப்படவில்லை; கோர்ட்டுச் சட்டத்தைப் பொறுத்தவரையிலே நீங்கள் கூறுகிறீர்கள் சிங்களம்தான் இந்த நாட்டின் கோர்ட்டு மொழியாக இருக்க வேண்டும் என்று: ஆனால், வடக்கு கிழக்கு மாகாணங்களிலே வருங்காலச் சட்டசபை வேண்டிய நடவடிக்கை எடுத்து தமிழ் உபயோகத்தை வேண்டுமென்றால் பாவிக்க விடலாம் என்று சொல்கிறீர்கள்;

உலகத்திலே பெரும்பான்மை மக்களுடைய மொழிக்கு அரசியல் சாசனத்திலே பாதுகாப்பு அளித்து சிறுபான்மை மக்களுடைய மொழிக்கு சட்டசபைதான் தீர்வு காணவேண்டும் என்று கூறுகிற அரசியல் சாசனம் உலகில் எங்காவது இருக்கிறதா என்று நான் கௌரவ அமைச்சரைக் கேட்க ஆசைப்படுகிறேன். எதற்காக நீங்கள் சிங்களத்துக்கு மட்டும்—நிர்வாக மொழியாக என்றாலும்சரி, நீதிமன்றமொழியாக என்றாலும்சரி—அரசியல் சாசனத்தில் பாதுகாப்பு அளித்து தமிழுக்கு வருங்கால சட்டசபை தீர்வு காணவேண்டும் என்று கூறவேண்டும்?

சிங்கள மொழியை ஒழித்துக்கட்ட எங்கள் மத்தியில் யாராவது இருக்கின்றார்களா? அவர்களிடமிருந்து சிங்களமொழியைப் பாதுகாக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருக்கின்றதா?

சிங்கள மொழி, இந்நாட்டில் வாழும் பெரும்பான்மை மக்களின் மொழி; இந்நாட்டின் சனத்தொகையில் 71 வீத மக்கள் பேசும் மொழி அந்த மொழியை ஒழிக்க யார் முன்வரப் போகிறார்கள்? எதற்காக சிங்களமொழிக்கு மட்டும் பாதுகாப்பு அளித்து, தமிழ்மொழிக்குச் சட்டசபை விரும்பினால் பாதுகாப்பு அளிக்கலாம் என்று கூற வேண்டும்?

### யாருக்குப் பாதுகாப்புத் தேவை

எங்களைப் பொறுத்தவரையில் இதுபற்றி எங்களுக்கு ஐயம் ஏற்படுகின்றது. ஒருவேளை இன்னோர் அரசாங்கம் பதவிக்கு வந்து தமிழுக்கு அரசியற் சாசனத்தில் ஏதாவது உரிமையைக் கொடுத்துவிடுமோ என்ற அச்சத்தினால்தான் இப்படி நடவடிக்கை எடுக்கிறீர்களா என்ற பயம் எங்களுக்கு இருக்கின்றது; புதிய அரசியற் சாசனத்தில் தமிழுக்கு இடமில்லாமல் செய்துவிட்டால் ஒருபோதும் தமிழுக்கு இடம் இல்லாமற் போய்விடும். இன்னோர் அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் தமிழுக்கு இடம் கொடுக்க முடியாது என்ற நோக்கத்தோடு தான் இவ்விதம் செய்கின்றீர்களா என்ற ஐயம் எங்களுக்கு இருக்கின்றது; அதனால்தான் உங்கள் நடவடிக்கைகளில் நாம் சந்தேகம் கொள்கின்றோம்.

ஒரு நாட்டில் சிறுபான்மை மக்களின் மொழி, கலை, கலாசாரம் ஆகியவற்றுக்கு இடம் கொடுக்கவேண்டும். அவற்றுக்குத்தான் பாதுகாப்பு தேவை; அதைவிடப் பெரும்பான்மை இன மக்களின் மொழி, மதம் ஆகியவற்றுக்குத்தான் நீங்கள் பாதுகாப்பு அளிக்கின்றீர்கள். எதைச் செய்யவேண்டும் என்பதைப் பற்றிப் பாராளுமன்றத்தில் பேசித் தீர்க்க முடியாது; அல்லது ஒரு சபையில் பேசித் தீர்க்க முடியாது; இரு தரப்பினரும் உறவாடி ஒரு முடிவுக்கு வந்து அந்த முடிவை அரசியற் சாசனத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டும்; அரசியற் சாசனத்தில் தமிழ் உரிமை வரையப்படாவிட்டால் அப்படிப்பட்ட ஒரு சாசனம் பயனளிக்கும் என்று நாம் நினைக்கவில்லை: அதனால்தான் நாம் இதனை ஏற்க முடியாதென்று கூறுகிறோம்.

இந்தச் சபை ஆரம்பித்து இங்கே நடந்த முதலாவது கூட்டத்தில் கௌரவ பீலிக்ஸ் ஆர். டீ: பண்டாரநாயக்க அவர்கள் பேசும் போது, அரசியல் நிர்ணய சபைக்கும் பாராளுமன்றத்துக்கும் ஒரு பெரிய வித்தியாசம் இருக்கின்றது என மிக அழகாகக் கூறினார். அந்த வித்தியாசம் சபாநாயகர் அணியும் உடையில் தங்கியிருக்கவில்லை. அல்லது சபாபீடத்தில் வைத்திருக்கும் செங்கோலில் தங்கியிருக்கவில்லை. அது வேறொரு விஷயத்தில்தான் தங்கியிருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

### அரசியல் நிர்ணயசபை எதற்காக?

பாராளுமன்றத்தில் நாம் விவாதிக்கும்போது அரசாங்கக் கட்சி, எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் விவாதிக்கிறோம்; ஆனால் அரசியல் நிர்ணய சபையில் விவாதிக்கும் போது அந்த அடிப்படையில் பேசாமல் எல்லோரும் சபையின் உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் கலந்து மனம்விட்டுப் பேசி ஒரு பிரச்சினைக்கு முடிவு காண்கின்றோம் என்றும் கூறினார். ஆனால் எத்தனையோ விஷயங்களைப்பற்றி எத்தனையோ நாட்கள் இந்த அரசியல் நிர்ணய சபை விவாதித்து விட்டது. எனினும், எந்த விஷயத்திலும் அரசாங்கக் கட்சி, எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் விவாதம் நடந்ததேயொழிய, நாம் எல்லோரும் அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் ஒருபோதும நடக்கவில்லை. எதற்காக இந்த அரசியல் நிர்ணய சபை இருக்க வேண்டும் என்கின்ற ஐயம் எமது மனதில் எழுகின்றது.

இன்றைக்கு நாம் விவாதிக்கும பிரமாணங்களை அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றி விட்டு இதுதான் இந்த நாட்டின் அரசியற் சட்டம் என்று வைத்திருக்கலாம். நாங்கள் அதை மாற்றி இருக்க முடியாது. இதுவரை இந்த சபையில் விவாதிக்கப்பட்ட எந்த அடிப்படைப் பிரேரணைக்காவது எதிர்க்கட்சி அங்கத்தவர்களுடைய திருத்தங்கள் எவையும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அடிப்படைப் பிரேரணை எதிலும் ஒரு "கமா" கூட மாற்றப்படவில்லை:

ஆகையால், ஒரு அமைச்சரதும் அவரைச் சேர்ந்த குழுவினதும் தீர்மானங்கள்தான் இந்த நாட்டின் அரசியல் சாசனமாக அமையப் போகின்றது. இப்படி உலகில் எங்கேயாவது ஒரு அரசியல் சாசனத்தை ஏற்படுத்தி இருக்கின்றார்களா என்பதை நான் அமைச்சர் அவர்களிடமிருந்து கேட்க விரும்புகிறேன்;

### எந்த அடிப்படையில் இயங்குகிறீர்கள்

இந்தியாவில் எத்தனையோ மகாநாடுகள் மூலம் விவாதித்து அங்கே புதிய அரசியல் சாசனத்தை ஏற்படுத்தினார்கள். பண்டிட் நேரு அவர்கள் அரசியல் நிர்ணய சபையின் ஆரம்ப உரையில் குறிப்பிட்டார்கள் அங்கே எடுக்கப்படும் தீர்மானங்கள் அத்தனையும் —*To arrive at a consensus*—எல்லோருடைய சம்மதத்துடனும் எடுக்கப்படும் என்று அந்த விதத்தில்தான் அவாகள் நடந்தார்கள்; கௌரவ பொது நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பேசும் போது அரசியல் நிர்ணய சபை அரசாங்கக் கட்சி, எதிர்க்கட்சி என்ற ரீதியில் இயங்காது என்றார்; ஆனால் இங்கே அவர்கள் நடந்துகொள்ளும்

(11ம் பக்கம் பார்க்க)

# ○ மந்திரி விஜயம் பிசுபிசுத்தது!
# ○ கல்வியதிகாரியின் சர்வாதிகாரம்!
# ○ பொலீஸ் விழாவா மாணவர் விழாவா?

வவுனியா மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார் அம்மையார் அரசாங்க அமைச்சர் திரு: குமாரசூரியர்: இவ்விழா வவுனியா நகரமண்டபத்தில் 14.8-71ல் நடைபெற்றது;

மந்திரி வருகையையிட்டு பல பிரமுகர்கள் அன்று வருகைதந்திருந்தனர்: மந்திரியின் வருகைக்கு ஏற்கெனவே வவுனியாவில் பலத்த எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. மந்திரி வருகையைப் பகிஷ்கரிக்குமாறு தன்மானத் தமிழர்கள் கேட்கப்பட்டனர்: இவ் விழாவில் வவுனியா பாராளுமன்ற உறுப்பினரோ தமிழரசுக் கட்சி அனுதாபிகளோ ஆசிரிய மாணவர்களோ கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### கல்வி அதிகாரியின் கண்டிப்பான உத்தரவு

மந்திரி வருகைக்கு மகத்தான எதிர்ப்புக் கண்டு அப்பகுதிக் கல்வி உயர் அதிகாரிகள் கதி கலங்கினர். மந்திரியை அழைத்தபின் திரண்ட எதிர்ப்பைக் கண்டு தீயில் மிதித்தவன் சங்கதியாக வவுனியா கல்வி அதிகாரி தாமாகவே கார் ஒன்றில் புறப்பட்டு ஒவ்வொரு பாடசாலை ஆசிரியர்களையும் கண்டிப்பாக அக்கூட்டத்திற்குச் சமூகம் தரவேண்டுமென்று வேண்டினார். ஒவ்வொரு ஆசிரியரும் ஆறும் வகுப்புக்கு மேலேயுள்ள மாணவர்கள் சகிதம் 14ந் திகதி வவுனியாவில் முகாமிட வேண்டுமென்று அக்கல்வி அதிகாரி உத்தரவு போட்டுச் சென்றார்.

கல்வி அதிகாரி நேரில் பாடசாலை, பாடசாலையாக விஜயம் செய்து கண்டிப்பான உத்தரவு போட்டதைக் கண்ட ஆசிரியர்கள் செய்வதறியாது 14ந் திகதி காலையே வவுனியா நோக்கிப் புறப்பட்டனர்.

பதை பதைக்கும் வெயிலில் மாணவரும் ஆசிரியரும் குடிப்பதற்கு நீர் கூடக் கிடைக்காது கஷ்டப்பட்டனர். விளையாட்டு மைதானத்தில் ஒரு தண்ணீர்ப்பந்தல் வைப்பதற்கு இக் கல்வி அதிகாரி ஏனோ எண்ணவில்லை?

கல்வி அதிகாரியின் கண்டிப்பான உத்தரவை—நேரில் சமூகமளித்துக்கூறிய உத்தரவைத்—தட்டிக்கழிக்க மனம் வராது அப்பாவி ஆசிரியர் விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்து மந்திரியின் பேச்சு முடியும் வரை நின்ற இடங்களிலிருந்து நாட்டக் கட்டையாக அக் கல்வி அதிகாரிக்கும் காட்சி கொடுத்த பரிதாபம் என்றும் மறக்க முடியாததொன்றாக இருந்தது.

இக் கல்வி அதிகாரியின் அதட்டலுக்கும் அஞ்சாது அதிகமான ஆசிரியர்கள்—தன்மான முள்ள ஆசிரியர்கள் விளையாட்டுப் போட்டிக்குச் செல்லாது இருந்து விட்டனர். இவர்கள் மாணவரையும் அழைத்துச் செல்ல விரும்பவில்லை;

அன்று 14ந் திகதி இலங்கை முழுவதும் பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காக விடுமுறை விடப்பட்டன; அத்துடன் அன்று ½ நேர வேலை நாளாகும். அப்படியிருந்தும் ஆசிரியர்கள் அன்று முழு நாளும் வவுனியாவில் நின்று அடுத்த நாள் 15ந் திகதியே தமது இருப்பிடங்களுக்குப் புறப்பட்டனர்;

### பொலீசார் தர்பார் நடத்தினர்

மந்திரிக்கு மக்கள் கூட்டத்தைக்கூட்டிய கல்வி அதிகாரி தமது சுயநல நோக்கத்தையும் முன்வைத்தே இப்படிப்

## வவுனியா தபால்

பாடசாலை பாடசாலையாகக் காவடி எடுத்தாராம்; அவர் கல்வி இலாகாவில் உயர் பதவி ஒன்றிற்குச் சமீபத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சென்றுள்ளார். அப்பதவிக்காக மந்திரி திரு; குமாரசூரியர் கடைக்கண் பார்வை பெறுவதற்கே இவர் இப்படி நடந்து கொண்டாரென்று மக்கள் பேசிக் கொண்டார்கள்.

மந்திரிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படும் என்ற செய்தி காட்டுத் தீ போல் எங்கும் பரவியது; இதை அறிந்த அரசாங்க உயர் அதிகாரிகள் இராணுவத்தையும் பொலீசையும் வைத்து கொண்டார்கள். மைதானத்தில் பொலீஸ்பட்டாளம் காணப்பட்டது. அன்று பொலிசார் தமது கடமையை நிறைவேற்றுமாறு கேட்கப்பட்டனர். இதனால் மாணவர்கள் நடாத்திய விளையாட்டுப் போட்டியில் பொலீசார் தர்பார் நடத்தினர்.

ஐந்து நிமிடத்துக்கொருதரம் பொலீஸ் ஜீப் வண்டி மைதானத்தைச் சுற்றி ஓடிக்கொண்டிருந்தது. குழப்பம் விளைவிக்கப்பட்டால் ஆட்களைக் கைதுசெய்து கொண்டு செல்ல பொலீஸ் லொறிகளும் மைதானத்தில் காத்துக் கிடந்தன;

மந்திரி குமாரசூரியரும் இவ்வித எதிர்ப்பை அறிந்திருந்தாரென்பதை அவர் தமது பேச்சிடையே குறிப்பிட்டார். விளையாட்டுப் போட்டியை நடாத்திய அதிகாரிகள் எதிர்ப்பை மந்திரி அறியாமல் செய்ய எடுத்த நடவடிக்கை பலனளிக்கவில்லை; பள்ளிப் பிள்ளைகள் கலந்து கொண்ட விழாவில் இத்தனை பொலீசாரின் வருகையைக் கண்ட மந்திரி சம்பந்தப்பட்டவர்களிடம் வினவினரென்றும் அவர்கள் அதன் பின்னரும் மறைக்க முடியாது உண்மையை உரைத்தார்களென்றும் அறியப்படுகின்றது;

அவசரகால சட்டத்தினால் அன்று மந்திரி மக்கள் எதிர்ப்பை நேரில் காணமுடியாது போய்விட்டது. தமிழ்மக்களுக்குச் செய்யும் திட்டமிட்ட துரோகங்களை தமிழ் மக்கள் தக்க தருணம் வரும் போது நிச்சயம் அரசாங்கத்திற்கு உணர்த்துவார்கள்,

—அப்பலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரில் வடித்தெடுத்த கவிதைகள்!

## செயல் வீரா! சாந்தி கொள்வாய்!

கவிஞர் ''யுவன்''

பார்வையில் ஒளியும், நெஞ்சப்
  பக்தியில் தெளிவும் மிஞ்சும்
நேர்மையில் நெறியும், வாழ்வு
  நிகழ்ச்சியில் ஆர்வம் காட்டும்
கூரறிவுள்ளோய்! எங்கள்
  குறைகளைத் தாங்கி நின்ற
சீர்மிகும் செயலின் வீரா!
  சீக்கிரம் சென்றிட்டாயோ?

வைத்தியத் துறையில் உந்தன்
  வன்மையைக் கண்டிருந்தோம்?
வைத்திய ஆற்றலோடு
  வாழ்க்கையைப் புரிந்து கொண்ட
வைத்தியனுகி ஈழ
  வளத்திற் காய்ப் பாடுபட்ட
வைத்தியர்... 'நாக நாதா?'
  வாழ்வினைத் துறந்திட்டாயோ?

தைரியம் உடைய நெஞ்சால்
  தமிழுக்காய் எதையும் செய்யும்
வைராக்கியம் உடைய சொல்லால்
  வளவாழ்வே காணும் நோக்கால்
கைத்தலம் தனிலே உந்தன்
  கடமையால் இரும்பனுக்கி
மெய்த்தலம் புகழக் கண்டோம்
  மேன்மையோய்! நீத்திட்டாயோ?

ஆங்கிலத்தில் ஆராய்ச்சி மேதை யானுய்!
  அபலைகட்கு அன்பூட்டும் ஜீவனுனுய்!
தூங்கி நின்ற தொண்டருக்குத் தூணுய் நின்ருய்!
  துடிப்போடு துன்பங்கள் தாங்கி வென்ருய்!
வீங்கும் உயர்மார்புடைய 'நாக நாதன்'
  வேங்கையென்று 'பகை மிரள' விழிப்பே கொண்டாய்
தூங்கி விட்டாய் இவ்வேளை! ஐயோ?—உந்தன்
  துணிவுள்ளம் காண்போமா? சாந்தி கொள்வாய்?

ஈழத்தாய் ஈன்றெடுத்த துணிவுள்ளோனே!
இதயத்துள் வாழுமெங்கள் நாக நாதா!
'கோழைகளா? ஏழைகளா? உரிமையற்றேர்?
குடிமக்களாகுவதா?' என்று கேட்ட
ஆழநோக்குடைய டாக்டர் நாகநாதன்
அன்பரது அகத்தினிலே வாழ்வார் என்றும்
வாழ வழி காட்ட வந்த பெரியோரோடு
வழியேகி விட்டதனுல் வாழ்வார் என்றும்!

உலகத்து வரலாற்றில் இன்றும் என்றும்
உரிமையற்ற மக்கள் குலம் வாழுமட்டும்
திலகத்தைப் போலென்றும் திகழுவாயே!
''தேன்'' தமிழ்த்தாய் வையத்தில் வாழுமட்டும்
தளம் அமைத்த தரம் உயர்ந்த டாக்டர் ஐயா
தகுதியுடன் எம்முள்ளே வாழுவீர்கள்?
வளங்காணத் துடிதுடித்த டாக்டர் உங்கள்
வழிகாண்போம்! நெஞ்சத்தால்!
சாந்தி கொள்க!!

## பண்டைத் தமிழர் கண்ட மறவா!

சோமலிங்கம்

இரும்பு மறைந்தது இதயம் அழிந்தது
    எங்கள் உணர்ச்சி ஒழிந்தது
கரும்பு கசந்தது கருணை மறைந்தது
    கன்னித் தமிழ் எழில் குறைந்தது
அரும்பு மீசை இளைஞர் உணர்ச்சி
    அழிந்து ஒழிந்து இன்றைக்கு
துரும்புகளென்ன தூசுகளென்ன
    சோர்ந்து கிடக்க நேர்ந்தது;

கன்னித் தமிழோ கட்டிய தாலி
    கழன்று இன்றே வீழ்ந்தது
பொன்னி நதிபோல் கண்ணீர் வெள்ளம்
    புரண்டு கடலில் வீழ்ந்தது
மண்ணில் கபடர் கொள்கைகளற்று
    மலிந்து திரிய நேர்ந்தது
நண்ணியோர் தமக்கு எண்ணிய தளிக்கும்
    நற்றமிழ் வல்லோனே!


குண்டாந்தடிகள் துண்டாக்கியவா!
    கோவென்றழச் செய்து
முண்டம் போன்று எம்மை ஆக்கி
    முழுதும் தனை மறந்து.
அண்டம் அலற எங்கே சென்றுய்?
    ஐயா! எம் நாக
பண்டைத் தமிழர் கண்ட மறவா!
    பாரை மறந்தனையோ?

## இமயம் சரிந்ததடா !....

— கல்முனைப் பூபால் —

குற்றலத் தெளிநீரின் செம்மை சான்ற
கொள்கையினுன்; நல்லூர்மண் ஈன்றளித்த
முத்தனையான்; ... திடநெஞ்சால் உரிமை காண
முக்காலும் உழைத்திட்ட முனைநேர் ஏந்தல்!
எத்துணையும் ஓர் துணையா ... செல்வா என்ற
இணையொன்றே தமிழ்ச்சாதிக் கேற்ற தென்று
கத்தியவன் வீழ்ந்தானு? ... ஐயோ எங்கள்
கனித்தமிழே எப்படியிங் காறுவோம் நாம்!

தனிஉரிமை — மொழியுரிமை ஈழ நாட்டுத்
தமிழர்க்குஇலை ... என்ற தருக்கர் நாவை
குனியாத உரம்பாய்ந்த கொள்கை நெஞ்சால்
குடைசாய்த்து ... நாடெல்லாம் குலத்து நீதி
மணக்கச் செய்தோன் ஈழ மண்ணில் (இ) ரும்பு
மனிதனென்னும் புகழ்நாமம் ஏற்று நின்றேன்!
அநியாயக் காலன்கை அம்பு பட்டு
அயர்ந்தானு? ... உள்ளத்தால் அழிகின்றேம் நாம்!



## நாகநாதா....!

இரும்பு மனிதா
  நாக நாதா
எங்கோ சென்றுய்
  எம்மை விட்டு,
கரும்புப் பேச்சில்
  தமிழ்மொழியதனை
கட்டிக் காத்தாய்
  உயிரினும் மேலாய்!

அடியும் உதையும்
  அனேகம் பட்டே
அன்னை மொழியாம்
  அமுதத் தமிழை,
வடியும் குருதி
  பீறிப் பாய்ந்திட,
தடுப்புக் காவலில்
  காத்து நின்றுய்!

எங்கள் நாடாம்
  ஈழ நாட்டில்
இயலிசை நாடகத்
  தமிழ்மொழியதற்கு,
பங்கம் இன்றி
  உரிமை பெறவே
பலத்தை ஈந்தே
  சென்றதும் ஏனோ!

—''சம்மாந்துறை அஸீஸ்''

★

## நாகா எங்குற்றுய்?

நல்லூர்த்தொகுதிபெற்ற
  நாடாளும் மன்னவர்
அல்லல் தீர்த்து வைக்கும்
  அன்பின் மறு, உருவம்,

இரும்பு மனிதன் என்று
  இதயகங்ள் போற்றுமிந்த
கரும்பின் கனிவுடைய
  கன்னித் தமிழ் மறவன்.

அஞ்சா நெஞ்சம்
        கொண்டார்
அடிபணியா வீரம் கண்டார்
  பஞ்சாய்ப் பறந்து வரும்
பாரோர்க்குத் தொண்டு
        செய்தார்.

  செம்மை சான்ற வீரர்
சென்று விட்டார்
        விண்ணுலகம்
  நம்மையெலாம் தவிக்க
        விட்டு
நாகா பறந்து விட்டார்.

—அடம்பனூர் இளவல்

★

## பறந்தனன் உலகை விட்டே!

கவிஞர்: வே. ஐயாத்துரை

செந்தமிழ்த் தாயின்
        செம்மைத்
  திருவடி சிரமேற் பூண்டு
சந்ததம் தளராச் சேவை
  தாங்கிய தனையன்
        மாருள்
முந்திநின் றேனே! இன்று
  முந்திவிட் டான்வான்
        நோக்கி
இந்நிலத் தமிழர் வாழ்வு
  இருண்டதே அந்தோ
        அந்தோ.

கரும்பெனத் தமிழை
        போற்றிக்
  கடமையைக் காத்து
        நின்றேன்
அரும்பெரும் தியாகம்
        செய்ய
  அஞ்சிடா உள்ள
        முற்றேன்
இரும்பனென் றுவமை கூறி
  எழிலுடன் அழைக்கப்
        பெற்றேன்
பெருந்துயர் தன்னைப்
        பெய்தே
பறந்தனன் உலகை
        விட்டே!

## "எம் தலைவா எங்குற்றுய்?"

நல்லூர் நமக்களித்த
  நாகநாதப் பெரியோய்!
வல்லோய் தமிழரசில்
  வாய்த்த பெரும் தலைவா!
எல்லோ ருங்கலங்க
  எங்குற்றுய் பிரிவாற்றல்
சொல்தல் எளிதோ
  சொல் தேர்ந்து;

இரும்பு மனிதன் நீ
  எமனும் நினை அணுக
விரும்பானே என்றல்லோ
  விளங்கி நின்றேம்—ஐயா
இருகூறுய் குண்டாந்
  தடியை முறித்த உடல்
உருக்குலைந்த கதை
  உணர்ந்தோ மின்று:

உன்னுடலை உருக்குலைத்து தமிழிற்காய் உதைபட்டாய்
        உயிரில் கால் பங்கு
அன்றுடனே சென்றதையா பல நாளாய்
        அடுத்துடன் நீ தடுப்புக்காவல்
சென்றிருந்த வேளையிலே சென்றதையா
        உன்னுடலில் மீதி கால் பங்(கு)
இன்றுடனே சென்றதுவோ இருந்திட்ட
        இன்னுயிரில் மீதிப்பங்கு!

தந்தையொடு தோள் நின்று தரணிக்குத் தமிழ்க்கட்சி
        தந்ததை நினைத்தழுவமோ
நந்தமிழ் உரிமைக்குத் தன்னுடல் பொருள் ஆவி
        தந்ததை நினைத்தழுவமோ
பைந்தமிழ் காத்திட பாதிரியாய்ச் செய்த
        பயணத்தை நினைத்தழுவமோ
எந்துயர் துடைத்திட இன்னுயிர் அளித்திட்ட
        ஏந்தலை நினைத்தழுவமோ!

—ப. வை. ஜெயபாலன்—

## 'ஆற்றுவோர் இதனை ஈங்கார்?'

(காந்தன்—கந்தர்மடம்)

''உடல் பொருள் உயிரிம் மூன்றும்
  உயர்வுடைத் தமிழிற்காக
இடர் பல உற்ற போதும்
  இன்புடன் ஏற்று வாழ்ந்த
திடமுள உள்ளச் செம்மல
  தீயினுக் கிரையாய் விட்டாய்!
அட இதை நம்பவோ? நான்!
  ஆற்றுவோர் இதனை ஈங்கார்?''

''பட்டங்கள் பதவி பார்க்கும்
  பண்பிலா மக்களிடையே;
வெட்டொன்று துண்டிரண்டாய்
  வீணரின் சூழ்ச்சிதன்னைப்
'பட்'டெனப் புட்டுக்காட்டும்
  பண்புடை ஏந்தலே நீ
விட்டெமைத் தனியே இங்கு;
  விண்ணுல கடைந்திட்டாயோ?''

''உனதுடல் மறைந்ததுண்மை
  உணர்ச்சிகள் சாகவில்லை.
தினந்தினம் உனது எண்ணம்
  தீந்தமிழிளைஞர் தம்மை
இனத்தினுக் குழைக்கச் சொல்லும்
  இழிஞரை ஒறுக்கச் சொல்லும்
கனவுகள் நனவாய் மாறக்
  காலத்தை வெல்லச் சொல்லும்!''

## பெருந்தலைவா....

— மருதூர்வாணன் —

தமிழ் பேசு முலக மக்கள்
  தணியாத துயர் தீரப் பணிசெய்த
அமிழ் தான அண்ணு எங்கள்
  அன்பு நாகநாதன் ஐயாநீங்கள்
தமிழ் வாழப் போராடி, வந்து —
  தடியடி பட்டும் தீயசிறை சென்றீர்,
உமிழ் போன்ற பொல்லா மூடர்
  உமைக் கேலி செய்தாலும் போராடினீர்—

கரும்பும் கசக்கும்படி நீங்கள்,
  கனிவான தமிழ் பேசுமினிமை கண்டேன்!
விரும்பாத நெஞ்சங்க ளும்பேச்சில்
  விஷநாகம் போற்சீறி எழுதல் கண்டேன்;
இரும்பு போலும் உமது வீர நெஞ்சம்
  இனிய குரல் தமிழ்காக்கப் பேசிப்பேசி
வருந்திப் போராடி ரத்தஞ் சிந்தி
  வாஞ்சை மிக்க தமிழன்னை விலங் கொடித்தீர்

மறு மலர்ச்சித் தலைவன் எங்கள்
    மா தியாகி தந்தை செல்வா வழியில்
பெறு சேவை யனைத்துஞ் செயப்
  பெரும் போர்கள் செய்த பேறு கண்டேன்!
நறு மணக் குந்தமிழ் மலர
  நால்சாதி பேதமின்றி மக்களுக்காய்
பெருஞ் சேவை அர்ப் பணித்த
  பெருந் தலைவா நீ சாகவில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவிலும் புதிய சாதனை புரிந்தவன்

அந்த வீரத்தலைவன்—வீணர்களின் விலாவொடித்து, வீங்கு தமிழ் தோளுயர்த்தி வெற்றியெந்தன் தமிழனுக்கே என்று வீறுகொண்டார்த்த விரிதடந்தோளான்—இதற்குமுன் எத்தனையோ திலும் இழக்கக் கூடாத தொன்றை இழந்து விட்ட ஏக்கம்; அடக்க முடியாத அளவுக்கு கண்ணீர்!

ஆனால் அவன் மட்டும் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருக்கிறான்!

பிரமாண்டமான ஊர்வலங்களைப் பார்த்திருக்கிறான்!

அலைகடலேஎ—ஆர்த்தெழுந்தசூறுவளியோ என அனைவருமே ஏங்கும்படி பல பவனிகளை அவன் நடத்தியிருக்கிறான்:

எத்தனையோ ஊர்வலங்களுக்கு தலைமை தாங்கியபடி அரிமா போல வீர நடைபோட்டு அவன் வந்திருக்கிறான்!

ஊர்வலத்தின் நடுவினிலே, உணர்ச்சி அலை கடைசி மூச்சு மட்டும் தமிழினத்துக்காக போராடிய பெருமிதம் அவனுக்கு...!

அவனுக்கு அது மட்டுமா பெருமிதம்?

இல்லை; இல்லை; யாரும் இலேசில்பெற்றுவிடமுடியாத சாவை அணைத்துக்கொண்டதிலும் பெருமிதம்தான்...!

இருக்காதா பின்னே...!

எந்தக்கொடியை அவன் தன் உயிரினும் மேலாக மதித்தானோ—எந்தக்கொடியின் கீழ் அவன் விடுதலைக்

புரள, உள்ளம் குதூகலித்திட, அவன் தனது கையசைத்து மக்களுக்கு எழுச்சி தந்திடும் அழகே தனி அழகன்றோ! அதைப்பார்த்திட கண்கோடி வேண்டுமே!

ஆனால்... இது அவனுக்கு இறுதி ஊர்வலம்!

முந்திய ஊர்வலங்களில் எல்லாம் எழுச்சி அலைபுரளும், உணர்ச்சி வெள்ளம் கொந்தளித்திடும்; குதூகலம் குவலயம் நிரம்பிடும்!

இந்த ஊர்வலத்திலோ ஒரே கண்ணீர் வெள்ளம்!

காகப் போரிட்டானோ—எந்தக்கொடி ஓங்கிப் பறப்பதுகண்டு அவன் உள்ளம் உவகையால் பூரித்ததோ—அந்தக்கொடியால் மூவண்ணக்கொடியால்—அவனது சடலம் மூடப்பட்டிருந்தது.

அதோ, அந்தத் தள்ளாடும் கிழவன்—கலங்கிய கண்களுடன் சோகத்தில் குளித்தபடி சவப்பெட்டியை தொட்டுத் தூக்கி வந்து ரதத்தில் ஏற்றுகிறான். அக்கிழவனது கண்களிலிருந்து ஒரு துளி

அவன் எல்லோருக்குமாகக்கண்ணீர் சிந்தியவன்; எனவே அவனுக்காக எல்லோருமே கண்ணீர் சிந்துகிறார்கள்:

முந்திய ஊர்வலங்களிலெல்லாம் அவனே முன்னின்று தானைத்தளபதியாகி ஊர்வலத்தை வழி நடத்திச் செல்லுவான்!

இந்த ஊர்வலத்திலும் அவனே தலைமகன் என்றாலும் அவன் உறங்கிக் கொண்டிருக்கிறான். ஆம் நீட்டி நிமிர்ந்து மீளா கண்ணீர் சவப்பெட்டி மீது விழுகிறது!

யாருக்கும் அடங்காத அவன்—யாராலும் அடக்க முடியாத அவன்—அந்த நடுங்கும் கிழவனுக்கு மட்டுமே அடங்கினான்; யாருக்கும் தலைவணங்காத அந்த வீரவேழம், இந்த மெல்லிய கிழவனுக்கு மட்டும் தலை வணங்கியது; அஹிம்சையை ஒரு போதுமே ஏற்றுக்கொள்ளாத அவன், கிழவனது சேர்க்கையால் அஹிம்சாவாதியானான்! அந்தக் கிழவன் அவனது தலைவன்!


உறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கிறான்!

ஆயிரம் யானைப் பலமுடைய அந்த சரித்திர நாயகனுடைய சடலம் சாதாரண மரப் பெட்டியொன்றுக்குள் அடங்கிக் கிடந்தது!

எங்கும் ஒரே துயரவெள்ளம்; எல்லோரது முகத் யாரை அவன் தன் தலைவனாக ஏற்றுக் கொண்டானோ அத் தலைவனின் கண்ணீர் அவன்மீது விழுகிறது!

அவனைத் தலைவனாக ஏற்றுக் கொண்ட பல்லாயிரவர் அதோ குமுறிக்குமுறியழுகிறார்கள்!

ஆம், தலைவனும் அழுகிறான்; தொண்[illegible]



டாக்டர் நாகநாதனின் இறுதிச்சடங்கின்போது சில சிந்தையுருக்கும் காட்சிகள். மேலே:— தொண்டமான் மு. சிவசிதம்பரம், துரைரத்தினம், அ. அமிர்தலிங்கம், தங்கத்துரை, எக்ஸ். எம். செல்லத்தம்பு, மு. திருச்செல்வம் ஆகியோர் துயரத்துடன் காணப்படுகிறார்கள். நடுவில்:— துயர்தோய்ந்த முகத்துடன் காணப்படும் தமிழரசுத் தந்தையிடம் ஏதோ கூறுகிறார் ஏ. கே. இராமலிங்கம். கீழே:— இறுதி ஊர்வலம் புறப்படுகிறது. அருகே பொதுச்செயலாளர் அமிர்தலிங்கம் காணப்படுகிறார்.

அழுகிறார்கள்! 'இந்தச்சாவு அல்லவோ உலகில் விரும்பி ஏற்கக்கூடிய சாவு என்கிறார் வள்ளுவர்.!

ஓ...அத்தகைய சாவை அல்லவா அவன் அடைந்திருக்கிறான்!

உண்மைதான்!

தலைவனும் கண்ணீர் சிந்த
தம்மைப்பின் தொடருகின்ற
விலைமதிப்பில்லாத்தூய
தொண்டரும் கதறிநிற்க
வருகின்ற சாவு போல
வையத்தில் இன்பமில்லை -
கருதியேயதையடைந்த
கண்ணிய நின்பேர் வாழும் !

எப்பொழுதோ எழுதிய என் கவிதைவரிகள் நினைவில்பளிச்சிடுகிறது!

அதோ, அவனது இறுதி ஊர்வலம் புறப்பட்டு விட்டது! அந்தச்சோக ஊர்வலத்தை தொடக்கிவைக்கிறார் நம்முடையபெரியவர்!

வன்னியரை, இராசவரோதயத்தை, ஏகாம்பரத்தை, வீ. ஏ. கந்தையாவை பறிகொடுத்தோமே அந்த வரிசையில் இப்போது இரும்புமனிதரையும் இழந்துவிட்டோமே...... என்கின்ற கடும் துயர் அந்த முதுமை முகத்தினில் கப்பியிருக்கிறது:

ஆனாலும் அதையும் [illegible] பாடு ஒளிவிட்டு பிரகாசிக்கிறது! ஆமாம் - கர்மவீரர் அன்றோ அவர்!

அதோ, அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக ஆலாலு, சோகம் கப்பிய முகத்துடன் நமது பொதுச் செயலாளர் அமிர்தலிங்கம், அவரது துணைவியார் மங்கையர்க்கரசி, இலட்சியத் தலைவர் தலைவர் டாக்டர் தம்பி ஐயா துணைத்தலைவர் கோபாலகிருஷ்ணன், திருமலைத் தோழர்கள் ஜெகநாதன், ஈழத்துநாதன், மலையகத்தோழர் கெங்காதரம், தமிழன் பாசறை அருணாசலம், பழுகாமம் கி. ச. தலைவர் செல்லத்துரை ஆவரங்கால் சின்

**கோவை-மகேசன்**

இராசமாணிக்கம், கோப்பாய் முத்து-கதிரவேற்பிள்ளை, கடமை வீரர் நவரத்தினம், ஜெயக்கொடி, வவுனியா சிங்கம் செல்லத்தம்பு, திருமலை வீரர் நேமிநாதன், துடிப்புமிக்க தங்கத்துரை, துரைரெத்தினம், பண்டிதர் இரத்தினம், உடுவில் தர்மர், ஆகிய தலைவர்களுட்பட தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்களும் தொண்டர்களும் இரதத்தின் கயிறுகளைப்பிடித்து இழுத்துச் செல்கிறார்கள்!

மலேயன் ட்ரேடிங் மணியம், ஏ. கே. இராமலிங்கம், வித்துவான் கந்தையா, கிளிநொச்சி ப. ச, தலைவர் முருகேசு, யாழ் மாநகரசபை உறுப்பினர்கள் நாகராசா, என். ரி. செல்லத்துரை, திருகோணமலை நகரசபைத் னத்துரை, பருத்தித்துறை வழக்கறிஞர் வேலும் மயிலும், இ. தி.மு.க.மணவைத் தம்பி, இப்படி எண்ணற்ற இயக்க நண்பர்களைக் காண்கிறேன். இவர்கள் எல்லாம் ஒப்புக்காக முகத்தைக் காட்டிப்போகவந்தவர்களல்லர்; ஈழத்தமிழ் நாட்டின் நான்கு திசைகளிலிருந்தும் அவனது செய்தி கேட்டு அதைத்தாங்கமுடியாமல் தலைநகருக்கு ஓடி வந்தவர்கள்; ஆயிரக்கணக்கான இயக்கத்தோழர்கள் இரதத்தின்கயிறுகளைபிடித்து இழுத்துச் செல்கின்றனர்!

இயக்கத்தோழர்கள் மட்டுமா? அவன்தான் பகைவர்களையும் நேசிக்கும் பரந்த இதயம் கொண்டவனாயிற்றே

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று நிகழ்ச்சிகள் முத்தான நினைவுகள்

இன்று அமரராகிவிட்ட இரும்பு மனிதன் வைத்திய கலாநிதி நாகநாதனின் வீர தீரச் செயல்கள் நாடறிந்தவையானலும், அவருடன் போராட்ட காலங்களில் கலந்து கண்ட நினைவில் நிற்கும் நிகழ்ச்சிகளை இன்று நினைவு கூறுதல் நன்ருகும்.

1961 பெப்ரவரி இருபதாம் நாள். தமிழரசுக் கட்சியினல் ஆரம்பிக்கப்பட்ட அறப்போரின் அதிமுக்கிய நாள் 'வடக்கு கிழக்கு மாகாணங்களில் எங்கள் ஆட்சி இல்லை' எனப் பிரதமரே கூறிய அளவிற்கு அறப்போர் நடந்துகொண்டிருந்தது.

பெப்ரவரி இருபது அன்று யாழ்ப்பாணம் அரசாங்க அதிபராக இருந்த திரு. ஸ்ரீகாந்தா அவர்கள் யாழ்—கச்சேரி அலுவலகத்திலிருந்து சுப்பிறீங்கோட் ஆரம்பிக்கப்போகவேண்டி இருந்தது. கச்சேரியின் பிரதான வாயில்கள்யாவும், தொண்டர்களாலும், தலைவர்களாலும் மறிக்கப்பட்டன. பழைய பூங்கா வாசல் வழியாகப் போகலாம் என்ற எண்ணத்தோடு அலுவலகம் செயல்பட்டது. இதை அறிந்த தலைவர்களும் தொண்டர்களும் அந்தப் பாதையையும் மறித்தனர். அதற்கு வைத்திய கலாநிதி இ. மு. வி. நாகநாதன் தலைமை வகித்தார்.

அரசபடைகள் சூழ அரசாங்க அதிபர் ஜீப் வண்டியில் வருகிருர். ஜீப் உறுமிக்கொண்டுவருகிறது. தலைவரும் தொண்டர்களும் ஜீப் நகர முடியாமல் தடுக்கின்றனர். ஒரு சில நிமிடங்கள் எல்லாம் ஸ்தம்பிதநிலை. மறியல் செய்வோரை அடித்து விரட்டும்படி அரசபடைகளுக்கு அதிபர் கட்டளை இடுகிருர். சொல்லவேண்டுமா? தலைவர் நாகாவும் தொண்டர்களும் அடித்து நொறுக்கப்பட்டனர்.

ஆனல், தலைவர் நாகாவிற்கு அடித்த அடியில் பொலீசாரின் குண்டாந்தடி முறிந்ததே தவிர நாகா அசையவில்லை. இழுத்து எடுக்கப்பட்டார். அப்படி அடிபட்டும் கலங்காத அந்தத் தீரனின் அன்றைய நிகழ்ச்சி இன்றும் பசுமையாய் நிற்கின்றது.

நாட்கள் ஓடுகின்றன. கச்சேரி அலுவல்கள் தொடர்ந்தும் ஸ்தம்பிதநிலை. எப்படியும் அலுவல்களை நடத்த வேண்டுமென அரசு கருதியது. அதற்காகத்திட்டம் உருவாகியது. அன்று நடந்த அறப்போரில் ஒருவரும் கச்சேரிக்குள் நுழைய முடியவில்லை. அரசாங்கத்தின் ஆலோசனையின்படி அனுராதபுரம் அரசாங்க அதிபர் நிசங்கா விஜயரத்ன அழைக்கப்பட்டார்.

இரவோடு இரவாக இரும்பு வேலிகள் இடப்பட்டன. கண்டிரோட் போக்குவரத்திற்கு மூடப்பட்டது. கச்சேரிக்கு வரும் பிரதான வழிகள் யாவும் அடைக்கப்பட்டன. பொலீஸ் பாதுகாப்பு நீக்கப்பட்டது. அந்த இடத்தை இராணுவம் நிரப்பியது. இரும்புத் தொப்பியும், நீட்டியதுப் பாக்கியுமாக இராணுவத்தினர் நின்று காவல் புரிந்தனர். துப்பாக்கிக் கவச வண்டியும் கொண்டுவந்து நிறுத்தப்பட்டது.

உள்ளே போவோர், வெளியே வருவோர் யாவரும் தடுக்கப்பட்டனர். விடியற்காலை நேரம். காலை இளம் வெய்யில் காய்ந்துகொண்டிருந்தது. தென்றற் காற்றின் இனிய மென் தழுவல். இத்தனைக்கும் மத்தியில் ஆண், பெண், தொண்டர்கள் யாவரும் பக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தனர். தொண்டர்கள் மலசலம் கழிக்கச் சென்ருலும் இராணுவ வீரர்கள் அவர்களைப் பின்தொடர்ந்தனர். அன்றுகாலை தொண்டர்களுக்கு வந்த காலை உணவு, தண்ணீர்கூடத் தடுக்கப்பட்டது. இந்நிலையில் டாக்டர் நாகா வருகிருர். அவர் பேசுகிருர்.

'தம்பிமார்களே! உசாராயிருங்கள். நிசங்காவை உள்ளே விடவரப் போருங்க. இன்று உங்களுக்குக் காலைச் சாப்பாடும் இல்லை. பட்டினி போடப்போருங்க எதற்கும் பயப்பிடாதேயுங்கோ. தமிழர்கள் அஞ்சமாட்டார்கள். உரிமைப் போராட்டங்களில் இப்படியான சம்பவங்கள் உண்டு. பாருங்கோ, ஐரிஸ் விடுதலைப்போரில் சாப்பாடு இல்லாமல், புல்லையும், மரத்தின் இலைகளையும் சாப்பிட்டுப் போராடி, வெற்றி கண்டிருக்கிருர்கள்'.

அவர் பேசிக்கொண்டிருக்கும்போது உணர்ச்சி மேலீட்டால் கண்கலங்குகிருர். உரிமைப்போராட்டத்தின் வலுவையும், கஷ்டங்களையும், அதற்காக நாம் செய்ய வேண்டிய தியாகங்களையும் எவ்வளவு அழகாக எடுத்துச் சொன்னர். அப்படி அவர் தொண்டர்களுக்கு உற்சாக மூட்டி நடத்திய தலைமைக் காட்சி மனதில் விழுகிறது.

நேரம் நகருகிறது. பட்டினியுடன், மிகவும் உற்சாகமுடன் எதையும் தாங்கும் இதயத்துடன் மறியல் செய்துகொண்டிருக்கின்றனர் தொண்டர்கள். பொலீஸ், இராணுவ அணிகள் புடைசூழ, ஜீப்பில் ஆரோகணித்து அனுராதபுரம் திரு. நிசங்கா விஜயரத்தின வருகிருர். தொண்டர்கள் நீக்கமற நிறைந்து மறியலில் நிற்கின்றனர். பிரதான வாசல்களுக்குக் கிட்டவும் அவர்களால் நெருங்கமுடியவில்லை.

ஒரு சிறு பாதை சயிக்கிள் போவதற்கு இருந்தது அந்தப் பாதையிலும் ஓரிரு தொண்டர் மறியல் செய்தனர். அந்தக் குறுக்குப் பாதையை அவர்கள் தேர்ந்தெடுத்தனர். தொண்டர்களே இழுத்து எடுக்கக் கட்டளை பிறந்தது. நாகா இதை அறிகிருர். விடுவாரா? ஓடி வருகிருர். பொலீஸ் அதிபர் அவரைத் தடுக்கின்ருர். அவரையும் மீறி ஓடிவந்து அந்தப் பாதையின் குறுக்கே நீட்டி நிமிர்ந்து மல்லாக்காகப் படுத்திருக்கிருர்.

பொலீஸ் அதிபர் வருகிருர். நாகாவின் பிடிவாதம் தெரிந்தோ என்னவோ நாகாவை இழுக்கவில்லை. ஐயகோ! நாகாவின் நெஞ்சுக்கு மேலே சப்பாத்துக்காலை வைத்து, ஏறிநின்று அரசாங்க அதிபரைத் தூக்கி உள்ளே விடுகின்ருர். மெய்சிலிர்க்கின்றது. அந்த நிலையிலும் சப்பாத்துக் காலால் மிதிக்கப்பட்ட வேளையிலும் தளராது தமிழ் மானம் காத்து நின்ற அந்த மாவீரனை நினைக்கும்போது இன்றும் மெய்சிலிர்க்கின்றது.

இப்படிப் பல. அவர் தமிழ் அறப்போர் வரலாற்றில் காட்டிய தீரச்செயல்கள் பலவற்றைக் கூறலாம். அத்தகைய மாபெரும் தியாகி எம்மை விட்டுப் பிரிந்து விட்டார். அன்னரின் வழி சென்று போராடுவதே அவருக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும். தான் தலைவனுகக் கொண்டவனும், தன்னைத் தலைவனுகக் கொண்டவர்களும் கண்ணீர் விட பிரியும் மறை மகத்தானது எனத் திருமறை கூறுகின்றது. அத்தகைய மாபெரும் தியாகியின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

காரைநகர் சுப்பிரமணியம்



## வரோதயத் தீபம்!

( புலவர்—சிவசேகரனுர் )

சோலையைக் காண வேண்டிச்
சூழ்ந்திட வேலி கட்டிக்
காலிகள் உள்ளே புகுந்து
கடித்திடா வண்ணம் காத்துக்
கோலிய பசளை இட்டுக்
குளிர்ந்திட நீரும் ஊற்றி
வாலிபப் பயிர் வளர்த்த
வரோதய வள்ளல் எங்கே?

காலையில் எழுந்து வந்த
கதிரவன் மறைந்து விட்டான்;
வேலையுள் மூழ்கி விட்டான்;
விரிசுடர் தணிந்து விட்டான்;
நீலவான் கடலை நோக்கி
நிற்கிருேம் அவனைக் காண
மாலையும் நீளு தந்தோ
வரோதயம் வருவதெப்போ?

கோணமா மலையில் ஏற்றிக்
குலமகள் வைத்த தீபம்;
ஆணவ இருளை ஓட்ட
அவள்கையில் கொண்ட தீபம்
பூணருங் குணத்தைப் பூண்ட
புண்ணியர் புகழ்ந்து போற்ற
வாணுதல் தமிழ்த்தாய் வளர்த்த
வரோதயத் தீபம் அன்ருே

தமிழ்மகன் என்ற சொல்லைத்
தரித்திடத் தகுதி உள்ளான்;
அமிழ்தினும் இனிய சொல்லான்;
ஆர்க்குமே கெடுதி எண்ணுன்;
இமையவர் எனினும் கொள்கை
இல்லவர் தம்மை நோக்கான்;
மமதைகள் அடங்கி வாழ்ந்த
வரோதயம் தமிழர் செல்வம்

ஈழத்தில் வாழும் மக்கள்
இனப்பகை நீங்கி ஒன்ருய்
வாழத்தன் வாழ்வை ஈந்த
வரோதய வள்ளல் அன்பின்
ஆழத்தில் உதித்து நின்ற
அருளொளி நாட்டைக் காக்கும்;
ஏழைக்காய் வாழ்ந்த நண்பன்
இதயத்தை வாழ்த்து வோமே,

● 27-8-71 திருமலை ஜோதி அமரர் இராஜவரோதயர் அவர்களின் எட்டாவது நினைவு தினமாகும்.

## சாவிலும் புதிய சாதனை....

(6ம் பக்கத்தொடர்ச்சி)

மற்ருரும் மதிக்க வாழ்ந்தவனுயிற்றே! எனவேதான், மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்த தொண்டமான், அஸீஸ், மு. சிவசிதம்பரம், அருளம்பலம், ஆனந்தசங்கரி, டட்லி சேனநாயகா மைத்திரிபால சேனநாயகா, ஜே. ஆர், பதியுதீன் மாமுத், குமாரசூரியர் இராணுவத் தளபதி சேபாலஅட்டியகல போன்ருேரும் மற்றும் பலரும் அவனுக்கு இறுதிமரியாதை செய்ய வந்து குவிந்திருக்கின்றனர்!

ஊர்வலத்தின் முன்னே பிரமாண்டமான தமிழரசு இயக்கக் கொடியொன்று எடுத்துச்செல்லப்படுகிறது. அதன்பின்னே ஒரு பெரிய மலர் வளையம்! தமிழரசுக் கட்சியின் கொழும்புக்கிளை அத்தலைவனது மலர்ப் பாதங்களில் சமர்ப்பித்த மலர் வளையம்தான் அது! அதில் நடுநாயமாக "தியாகிகள் சாவதில்லை" என்ற வாக்கியம் பொறிக்கப்பட்டிருந்தது.

ஓ...... என்ன அருமையான - பொருத்தமான வாக்கியம் அது.

ஆம், தியாகிகள் சாவதில்லைத்தான்! அவன் ஒரு தியாகி. அவனும் ஒருபோதும் சாகமாட்டான்! தமிழ் இனத்தின் நெஞ்சங்களில்இடம்பிடித்துக்கொண்டுவிட்டவன் அவன். அவன் மறையவில்லை; தமிழ்வாழும் வரை மறையவும் மாட்டான்!

இடி இடிக்கிறது; மாரிகாலம் போல கடும் குளிர் அடிக்கிறது! மழை சோனவாரியாகக் கொட்டப் போவது போல மிரட்டியபடி இருக்கிறது; கடுமையான தூற்றல் அடிக்கிறது! எனினும் மக்கள் இவற்றை துளியும் பொருட்படுத்தவில்லை!

காலமெல்லாம் தமிழினத்துக்காக உழைத்த தலைவனுக்கு இந்த இறுதி மரியாதையைக் கூட செய்யாவிட்டால், தமிழினம் நன்றி கெட்ட இனமாக வல்லவா போய்விடும்! அந்த அவப்பெயர் வருவதற்கு தமிழ் மக்கள் இடம் கொடுக்கவில்லை!

ஊர்வலத்தின் நீளம் ஏறத்தாழ ஒருமைமல் அளவு இருக்கும். ஊர்வலம் சென்ற தூரம் சுமார் மூன்று மைல்கள்!

ஊர்வலம் சென்ற வழியெங்கும் ஆங்காங்கு தமிழ் மக்கள் திரண்டு நின்று அத்தியாகத்தலைவனுக்கு இறுதி அஞ்சலியை செலுத்தினர்; தமிழ் மக்கள் மட்டுமென்ன! தெருவோரங்களில் நின்ற பொலீசார், இராணுவத்தினர்கூட அல்லவோ அந்த வீரத் திருமகனுக்குஅஞ்சலி செலுத்துகிருர்கள்!

தமிழினத்தைப் பீடித்திருந்த ஜாதிமத வேறுபாடுகளை கிள்ளியெறிந்தவன் அவன். மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னர், வவுனியா, திருமலை—என்ற பிரதேசப் பிரிவினைகளையெல்லாம் பீரங்கி வைத்துத்தகர்த்தவன் அவன்.

அதனுல்தான் அவனது இறுதி ஊர்வலத்தில் கிழக்கும் வடக்கும் மலையகமும் கைகோர்த்து செல்லும் இனிய காட்சியை காண முடிகிறது. கத்தோலிக்கமும், கிருத்துவமும், சைவமும், இஸ்லாமும் கட்டித் தழுவுவதைக் காணமுடிகிறது.

'நமச்சிவாய வாழ்க—'நாதன் தாள் வாழ்க'—மணிவாசகப் பெருமானின் திருவாசகம் ஊர்வலத்திடையே எழுகிறது; ஆம், கொழும்புத் தெருக்களிலே தமிழ் முழங்குகிறது! அவனது இறுதி ஊர்வலத்திலும்தமிழ் முழக்கம்!

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்புள்ள ஆசிரியர்
அவர்கட்கு,

கேவலங்கள் வாழும் பகுதிக்குள்ளே ''நானே தான் புனிதம்'' என்பது போல்—பல சாக்கடை ஏடுகள் வெளிவரும் கொழும்பு மாநகரத்தின் ஒரு மூலையிலிருந்து துடிப்புடன் வெளிவரும் சுதந்திரனையும் அதன் ஆசிரியரான உங்களையும் எண்ணும்பொழுது என் போன்ற தமிழ் ஆர்வமும்—இனப்பற்றும் கொண்ட ஆயிரமாயிரம் இளைஞர்களது இதயங்கள் விம்மிப் பொருமுகின்றன.

சத்தியமே வாழ்வாகக் கொண்டு இந்திய மக்களின் விடுதலைப் போருக்கு ''காந்திஜி'' கடைசி நம்பிக்கையாக வாழ்ந்ததனைப் போல இன்று ஈழ நாட்டின் தமிழ் மணிகளின் வாழ்க்கைக்கெல்லாம் கடைசி நம்பிக்கையாக தமிழர் நாயகம் தந்தை செல்வா தான் வாழ்கிறார் என்று எண்ணும் போதும், இந்தக் ''கடைசி நம்பிக்கையிடத்தில் கூட'' புனிதம் இல்லையென புல்லர் தம் ஏடுகள் கூறுகின்ற வேளைகளில் சான்றுகளோடு அப்படியில்லை யென்று சாடி என் போன்ற இளைஞர்களது மனத்துயரைப் போக்குகின்ற ''கோவையையும்'' ''சுதந்திரனையும்'' தான் கடைசி நம்பிக்கைகளாக கைக்கொள்ளவேண்டியுள்ளது என்றும் எண்ணும் வேளையிலும், இரத்தக் கண்ணீர் சிந்தும் இந்த இதயம் சிறிது சாந்தியடைகிறது.

''சுதந்திரன்'' என்பது ஒரு 'சாதாரண ஏடு' என்ற பல பேருடைய எண்ணத்தில் இப்பொழுது மாற்றம் ஏற்பட்டிருக்கிறது: பணபலமும்—ஆள்பலமும் மிகுந்த சாக்கடை ஏடுகளின் கீழ்த் தரமான — கேவலமான பழிச்சொற்களை--நாம் தான் சோசலிச வாதிகள் — ஜனநாயகவாதிகள் எனக் கூறிக் கொண்டு, சர்வாதிகார ஆட்சி முறையால், ஏவிவிடப் பட்ட பல கொடுஞ் செயல்களை--தமிழ் துரோகக்கும்பல்களின் பச்சைத் துரோகமான பேச்சுக்களை — தனித்து நின்று எதிர்த்து தவிடு பொடியாக்கிய — தன்மானத்தில் சிறந்த — தனக்கு நிகரில்லாத பத்திரிகை ''சுதந்திரன்'' என்பது இன்றைய— பலபேருடைய எண்ணமாகி இருக்கிறது என்றால் இது தான் தமிழ் மணிகளின் வாழ்க்கைக்குக் 'கடைசி நம்பிக்கை' என்பதில் தவறென்ன காணமுடியும்?

ஆட்சி செலுத்தும் அதிகார வர்க்கத்தினரிடமிருந்து தமிழினத்தை காப்பதனை விட தமிழினத்தின் மத்தியில்—பேராசையால் — பண்பழிவால்—பொய்மையான வாழ்க்கை முறையால் —எல்லாமாகச் சேர்ந்த சுயநலத்தால்—காட்டிக் கொடுத்து வாழ்ந்துவிடத் துடிக்கும் தமிழினத்தின் தரங்கெட்ட தமிழர்களால் நேருகின்ற துன்பத்திலிருந்து இனத்தை காப்பதுதான் இன்று பெரும் போராட்டம் என்பதனை என் போன்றவர்களும்— தாங்களும் உணர்ந்து கொள்ளவேண்டும்;

எல்லாம் இழந்துவிட்ட நிலையிலும் தமிழினம் இன்னும் கடைசி நம்பிக்கையுடன் தான் நிற்கிறது என்பது என் போன்றவர்களது பொறுப்பினை அதிகரிக்கச் செய்து கொண்டிருக்கிறது:

நாற்று நட்டோம் — களையும் பிடுங்கியாகி விட்டது — இனிக் காலம் வரவேண்டும் அறுவடைக்கு! என்ற நம்பிக்கையுடன் — பயிர் வாடாமல் —பன்றியும்—யானையும் காட்டெருதுகளும் பாய்ந்தழித்து விடாது, காத்துப் பயன்பெற வேண்டிய பொறுப்பான பகுதிக்கு நாம் வந்திருக்கிறோம்.

தமிழினத்தின் விடுதலை என்ற பச்சைப் பசேல் நெற்பயிர் வயல் வெளியை தமிழ் மக்களின் பலத்துடன் காத்துவருவது ''கோவை'' என்ற கோல் கொண்டு சுதந்திரன் என்ற விடுதலை வீரன் தான் என்பதனை எண்ணி எண்ணி பூரிப்படைகிறோம்;

தங்கள் பணிக்குத் தலை வணங்குகிறேன்

தமிழ் வாழ தலை தருவேன்

தந்தை செல்வா நலம் வாழ உயிர் துறப்பேன்


தமிழினம் தலை நிமிர அனைத்தும் இழப்பேன்;

அன்புடன்
எஸ். சண்முகநாதன்
83, கண்டி வீதி,
சாவகச்சேரி.

# 'வடமொழி மட்டுமல்ல தமிழும் தேவ பாஷைதான்

## புராணிகர்களுடன் வாதிட்டு இதை நிலைநாட்டவும் நான் தயார்'

## தமிழக முதல்வர் கருணாநிதி கூறுகிறார்!



'சமஸ்கிருதம் தான் தேவ பாஷை-தேவனுக்குரிய பாஷை சமஸ்கிருதம்தான்' என்ற நம்பிக்கை நம் நாட்டில் புகுத்தப்பட்டிருக்கிறது; சமஸ்கிருதம் மட்டும் தேவ பாஷை அல்ல; தமிழுக்கும் தேவபாஷைத் தகுதி உண்டு என்று சொல்லிக் கொள்கிறேன்.

'முதலையுண்ட பாலகனை சுந்தரர் மீட்டது தமிழ்ப் பாடலால்தான்; ஆகவே தெய்வீகம் தமிழ்மொழிக்கும் உண்டு; இதுபற்றிப் புராணிகர்களிடம் வாதிடுவதற்குக் கூடத் தயாராக இருக்கிறேன்; 'சமஸ்கிருதம் ஒன்றுதான் தேவ பாஷை என்று சொன்னால், தமிழுக்கும் அந்த ஆற்றல் உண்டு' என்று குறிப்பிட விரும்புகிறேன்'

'தமிழில் அர்ச்சனை செய்யப்படுகின்ற நேரத்தில் ஆண்டவனுடைய பெயர்கள்... ஏற்கனவே அறிமுகமாகியுள்ள பெயர்கள் எதனையும் மாற்றுவதில்லை; அந்தப் பெயர்களை வைத்துத் தான் தமிழிலும் அர்ச்சனை செய்யப்படுகிறது: தமிழில் அர்ச்சனை செய்யும் போது, புரோகிதர் என்ன சொல்லி ஆண்டவனைப் போற்றுகிறார் என்பது புரிகிறது; வேறு இடங்களில் அது புரிவதில்லை;

மறைந்த நாவலர் சோம சுந்தர பாரதியார் அவர்கள் ஒரு முறை சொன்னார்கள்— அதாவது திருமணம் புரோகித முறையில் நடைபெற்றதாம்; 'அவருக்குச் சமஸ்கிருதம் தெரியாது' என்று நினைத்துப் புரோகிதர் மந்திரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தாராம்; இவருக்கு அது தெரிந்து அந்தப் புரோகிதரைப் பார்த்துக் கேட்டாராம்... 'கருமாதிக்குச் செய்யவேண்டிய மந்திரங்களைக் கல்யாணத்திற்குச் செய்கிறாயே' என்று!

'ஆகவே வடமொழி மற்றவர்களுக்குத் தெரியாத காரணத்தினால், அதில் நல்ல பயிற்சி பெறாதவர்கள் எதையும் சொல்லிவிட முடியும்; ஆகவே, அனைவருக்கும் புரியும் மொழியில் வழிபடும் நிலை இருந்தால்தான், 'எந்த மொழியில் ஆண்டவனைத் தோத்திரம் செய்கிறோம்' என்று இவர்களுக்கும் தெரியும்— ஆண்டவனுக்கும் புரியும்.'

'ஆண்டவனைப் போற்றுவதற்குப் புதிதாக போற்றுதல்கள் ஒன்றும் ஏற்படுத்தவில்லை; ஏற்கெனவே உள்ள தேவாரம்—திருவாசகம் போன்றவற்றிலுள்ள மந்திரத்தைத்தான் பயன்படுத்த வேண்டும்' என்று சொல்கிறோம்; சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடியது' என்று சொன்னால், அவர்களைக் கவரக்கூடிய சமஸ்கிருத அர்ச்சனை மட்டுமல்ல—வேறு பல அம்சங்கள் இருக்கின்றன;

'நான்கூடக் கோவிலுக்குப் பக்தியோடு செல்லவில்லை — பார்ப்பதற்காகச் சென்றபோது—அங்கே சொல்லப்பட்ட தமிழ் அர்ச்சனையைக் கேட்டபோது, கேட்பதற்கு அது உள்ளபடியே இனிமையாக இருந்தது; சமஸ்கிருதத்தில் அர்ச்சிக்கும்போதுதான், அது, உண்மையிலேயே ஒரு மொழி சொல்வதுபோல் காதிற்குக் கேட்கிறதே தவிர, கருத்துக்கு ஒன்றும் புரியவில்லை!

### துரையப்பாவுக்கு தியாகராசா பதில்!

சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் இப்போது ஏற்றுக்கொண்டு விட்டார்கள்.

—யாழ் சிறீலங்கா சு: கட்சியின் முதலாவது ஆண்டு விழா:வில் அல்பிரட் துரையப்பா (வீரகேசரி 9. 8. 71)

சிங்கள மக்களின் மனப்பான்மை இப்போது பெரிதும் மாறிவிட்டது. சிங்கள எம்: பீ. க்களின் மனத்திலும் பெரிய திருப்பம் ஏற்பட்டுள்ளது: தமிழர் மனதில்தான் அந்த திருப்பம் இன்னும் ஏற்படவில்லை.

—ஆ: தியாகராசா (அதே கூட்டத்தில் — வீரகேசரி 9-8-71.)

அத்தானுக்குப் பதில்:

## இதற்குத்தான் அவள் மறைத்தாள் !

—அக்கரை ''பாமா''—

பெண்குலத்தைக் கவியாலே தாக்கு வதே
பெருமையாய்க் கொள்கின்ற ''அத்தான் நீங்கள்
தண்டமிழால் வார்த்தளித்த கவிதை தன்னைத்
தவறாமல் படித்திட்ட காரணத்தால்
புண்ணாகி என்னுள்ளம் பொறுமை மீறிப்
புதுத்தெம்பு பிறந்ததனால் துணிவோ டெந்தன்
எண்ணத்தைக் கவியாக்கித் தருகின்றேன் யான்
இனியேனும் எமைத்திட்டா திருப்பீர் ''அத்தான்!''

எத்தனையோ காலங்கள் கிடுகு வேலிக்
கிடையினிலே என்வாழ்வைக் கழித்து அன்று
பத்துமா தம்சுமந்து என்னைப் பெற்றுப்
பரிவோடு வளர்த்தஅன்னை யோடு நானும்
புத்தாடை பூண்டுதெய்வம் தன்னைவேண்ட
பூவோடு கோவிலுக்குச் செல்லும் போது
சித்தம் கலக்கும்சம்ப வத்தைக் கண்டு
திகைப்போடு மனம்பதைத்தே நின்றேன்
''அத்தான்!''

மணமுடித்து மாதங்கள் சிலதான்; அந்த
மங்கையவள் தன்கணவ னோடு வந்தாள்!
கணவனவன் அன்னவளைத் தனித்தே விட்டுக்
கடையொன்றில் சாமான்கள் வாங்கச் சென்றான்!
கணவன்வர வைப்பார்த்து நின்ற அந்தக்
கன்னிக்கு அருகினிலே சென்றான் காளை
தனவந்தன் போல்பார்க்க; கண்க ளிலே
'சன்கிளா' சும்அணிந்து இருந்தான் கையில்...

உயர்ந்தரக சிகரெட்டை வைத்து; வாயின்
உள்புகையை இழுத்துவெளி விட்ட படி
கயற்கன்னி கழுத்தினிலே மின்னிக் கொண்டு
காட்சிதந்த தாலியினைப் பார்த்தவாறு
நின்றிருந்தான் காளையவன்! பயத்தால் கன்னி
நின்றிருந்தாள்! அவள் கணவன் வருவதற்குள்
தன்திறனைக் கன்னியிடம் காட்டி; அவள்
தாலியினை அறுத்துக்கொண் டோடி விட்டான்!

போலிசில் சென்றிதனைக் கூற; அந்தப்
புன்செயலைச் செய்தவனைப் பிடிப்ப தற்கு
போலிசார் முயன்றும்முடிய வில்லை; பறி
போனதுதான்! இதுபோன்று நடப்ப தாலே
தாலியினைத் தெய்வமாய் மதிக்கும் எங்கள்
தமிழ்ப்பெண்கள் பவுத்திரமாய் மறைத்து வைத்துத்
தாலியினைக் காப்பாற்ற முயல; நீங்கள்
தமிழ்ப் பெண்ணைக் கண்டபடி திட்ட லாமா?

# மூதூர் தொகுதி ஆசிரிய நியமனம் எப்படி நடைபெற்றது!

## தங்கத்துரை தரும் விளக்கம்!

''மூதூர் தமிழர் நலன் பேணும் எம். பி: யார்'' என்னும் தலைப்பில் யாரோ ஒரு அனாமதேயத்தின் அறிக்கையொன்றை 2-8-71ல் தினபதியார் பிரசுரித்திருக்கிறார்: மூதூர் தமிழர்களின் நலனுக்காக அயராதுழைத்து வருபவன் நானா வேறு யாருமா என்பதை மூதூர் தொகுதி தமிழர்களைக் கேட்டால் கூறுவார்கள்; மூதூர் தமிழர்களுக்கு அள்ளிவைப்பவர்களை மூதூர் தமிழர்களின் இரட்சகர் என்று தினபதியார் கூறினால் அதை நம்புவதற்கு எனது தொகுதியிலுள்ள சிறு தமிழ்க் குழந்தை கூட ஆயத்தமாக இல்லை.

5-8-71 தினபதி அத்தாணி மண்டபத்தில் அசட்டுக் கேசரியார், மூதூர் மெயின் வீதியைச் சேர்ந்த திரு. ஏ: கதிர்காமநாதன் என்பவர் எழுதியிருப்பதாக ஒரு கடிதத்தை பிரசுரித்திருக்கிறார்.

(கதிர்காமநாதன் என்ற பாத்திரம் அசட்டுக்கேசரியாரின் கற்பனையாகவும் இருக்கலாம்)


அக்கடிதத்தில் அண்மையில் நடைபெற்ற தராதரப் பத்திரமற்ற ஆசிரியர் நியமனத்தில் நான் பாரபட்சமாக நடந்ததாக ஓர் அபாண்டமான குற்றச்சாட்டு என் மீது சுமத்தப்பட்டிருக்கிறது. இதை முற்றாக மறுப்பதுடன் பலமாக கண்டிக்கிறேன்.

தராதரப் பத்திரமற்ற ஆசிரியர் நியமனம் எதுவும் தமிழரசு பா. உ.க்களின் சிபார்சின் மீது நடக்கவில்லை திறமையின் அடிப்படையிலேயே இது நடைபெற வேண்டுமென்று நாம் கேட்டிருந்தோம்:

எனது தொகுதிக்கு ஆகக் குறைந்தது 25 தராதரமற்ற ஆசிரியர்களாவது நியமிக்கப்பட வேண்டுமென்று கேட்டிருந்தேன்; 16 பேருக்கே நியமனம் கிடைத்துள்ளது. கிராமரீதியாக நியமன விபரம் வருமாறு:—[illegible] பலகாமம்—2 கிண்ணியா—1, ஆலங்கேணி—2, இருள்குளி—1, கட்டை பறிச்சான் சேனையூர்—3, சம்பூர் — 1, பள்ளிக்குடியிருப்பு—1 மல்லிகைத்தீவு—1, கிளிவெட்டி—2, கங்குவேலி—1, மூதூர்—1;

எனது தொகுதியிலுள்ள தமிழ் பாடசாலைகளில் 110 ஆசிரியர்களுக்கு இடமிருக்கிறது. ஆனால் கிடைத்ததோ ஆக 16. மூதூர் தொகுதிக்கு நியமனம் கிடைத்துள்ள 16 பேரில் ஒருவர் இருவர் எனது இனத்தினராக இருக்கலாம். ஆனால் யாருக்குமே நான் தனிப்பட்ட முறையில் சிபார்சு செய்யப் போகவில்லை. ஆளுங்கட்சிக்கு முட்டுக்கொடுப்பவர்களிடம் யாராவது சென்று காட்டவேண்டியதை காட்டி பெறவேண்டியதை பெற்றுக் கொண்டார்கள் என்றால் [illegible] டார் திரு. தங்கத்துரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீக்குள் விரலை வைத்தால்...!

## (அத்தியாயம் 10)

மனம் ஒரு குரங்கு என்று கூறியவன் உண்மையில் பெரும் அறிஞன் தான். இந்த மனதில் எழும் விசித்திர உணர்வுகளும் அவை மாறும் விதங்களும், அடிக்கடி ஏற்படும் மாற்றங்களும் குரங்கின் செய்கை போன்றிருந்ததை நன்குணர்ந்து கொண்டதினுல்தான் மனம் ஒரு குரங்கு என்றுன் போலும். வியப்புக்கு மேல் வியப்பாக ரகு நடந்துகொண்டபோது பானுவின் மனம், மர நுனியில் தொங்கும் ஒரு கனியைப் பறிக்க அடிமரத்திலிருந்து தாவும் குரங்குபோல மேலே மேலே போய்க்கொண்டிருந்தது.

"என்ன ரகு? இதுவும் ரேப்றெகாடரா?" என்றுள்.

"ஆமாம். நாகலிங்கம் முதன் முதல் உங்களிடம் பேசியதிலிருந்து கீதா அறைக்குள் வந்த வரையில் நடைபெற்ற பேச்சுக்கள் இதில் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளன," என்றுன் புன் சிரிப்புடன்.

"அப்படியானுல் பத்தாயிரம் ரூபாவுக்கு விற்றீர்களே ரகு?"

"அது ஒருபோலி. போலிக்கு இருக்கும மதிப்பு அசலுக்கு இருப்பதில்லையே" என்றுன். அவன் விழிகளில் வெற்றியின் பெருமிதம் நன்கு தெரிந்தது.

"ஏன் ரகு? இவற்றையெல்லாம் எதற்காகக்கொண்டு வந்தீர்கள்?" என்றுள் பானு.

"நல்ல கேள்விதான். இது தொழில் ரகசியம். ஆனுலும் உங்களுக்குச் சொல்லலாம். நான் ஏற்றிருக்கும் பொறுப்பு பல லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களைக்கொண்டுசென்று கையளிப்பது. சில சமயம் பெரும் புள்ளிகள் மோசடி செய்துவிட்டு இடையில் நிற்கும் அப்பாவிகளைச் சிறைக்குள் அனுப்பிவிடுவார்கள். அவர்களுக்கு உயிரை விடப் பணம்தான் பெரியது. ஆகவே இப்படியான ஒன்று இருந்தால் சாட்சிகள்தேவையில்லையல்லவா?" என்று கூறிவிட்டு அவளையும் அழைத்துக்கொண்டு வங்கிக்குச் சென்று திரும்பினுன். அதன் பின்பு அவள் ரகுவுடன் கதைக்கச் சந்தர்ப்பமே இருக்கவில்லை.

அப்பொழுதுதான் அவன் கொடுத்த ரசீதின் நினைவு அவளுக்கு வந்தது. உடனே எழுந்து போய் அந்த ரசீதை எடுத்துப் படித்துப் பார்த்தாள். அவனுடைய முன்யோசனையான திட்டங்களுக்கும், செயல்களுக்கும் பெரும் விவேகமுள்ள ஒருவனுகவே பானுவின் மனதுக்குத் தோற்றமளித்தான். பானுமதி அவனைப் பற்றிய கற்பனையிலேயே ஒன்றி விட்டிருந்தாள்.

மாலைப்பொழுதின் எழிற் காட்சி, இயற்கையன்னை மந்த காசமாய் புன்னகை பூர்த்து நிற்பது போன்றிருந்தது. வெளி விருந்தையில் சாய்வு நாற்காலியொன்றில் படுத்தபடி ஏதோ வெளிநாட்டுச் சஞ்சிகையொன்றில் மூழ்கிக் கிடந்தான் ரகுராமன். அந்தச் சஞ்சிகையின் உட்புறத்தில் ஏதோ ஓர் உயர்தர வாசனைத் தைல விளம்பரத்துக்காக அழகிய ரோஜாப்பூவின் படம் ஒன்று போடப்பட்டிருந்ததைப் பார்த்து விட்டுத், தோட்டத்தில் மலர்ந்து குலுங்கும் ரோஜாப்பூக்களையும் பார்த்தான்.

அழகாக மலர்ந்து மணம் வீசிக்கொண்டிருந்த ஒரு ரோஜாவின் மீது, ரீங்காரமிட்ட வண்ணம் சுற்றிக் கொண்டிருந்தது ஒரு வண்டு. சஞ்சிகை படிப்பதை நிறுத்திவிட்டு அந்தக் காட்சியில் அவன் மனம் ஈடுபட்டது. சுற்றிப் பறந்த வண்டு சும்மா போகவில்லை. மொட்ட விழ்ந்து கொண்டிருந்த இதழ்களில் தன் உணர்வு கொம்புகளை நீட்டிக் கட்புலனுக்குப் புரியாத ஏதோ வினோதங்களைச் செய்து கொண்டிருந்தது. அடிக்கடி ஒவ்வொரு இதழிலும் மாறி மாறி இருந்து எழுந்து பறந்தது. மலர்களில் தேனை மட்டும் உண்டு செல்ல வண்டு வரவில்லை. அந்த மலர்களை மேலும் மலர்விக்கவும் செய்கின்றது வண்டு என்பதை உணர்ந்து கொண்டான் ரகுராமன். இப்படித்தான் பெண்களும்... ஏனென்றுல்... பெண்களை மலர்களுக்கு ஒப்பிட்டுக் கூறியதன் தன்மை என்னவாயிருக்கும் என்ற சிந்தனையில் ஈடுபட்டிருந்தான் ரகு.

"என்ன! எந்தக்கோட்டையைப் பிடிக்க யோசனை நடக்கிறது?" என்று தேனினுமினிய குரலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தான் ரகுராமன்.

அழகே உருவாக நின்றிருந்தாள் பானுமதி. வேண்டுமென்றே தன் இயற்கை அழகுக்கு மெருகூட்டியிருக்கிறுள் என்பதை உணர்ந்துகொண்டான் ரகுராமன்.

"என்ன நான் கேட்கிறேன் பேசாமலிருக்கின்றீர்களே? என்றுள் பானுமதி.

"கேட்டதற்கெல்லாம் பதில் சொன்னுல் அதற்குச் சில சமயம் மதிப்பில்லாமல் போய்விடலாம் ரீச்சர்."

"நான் ரீச்சர் என்பதினுல் கேட்கவில்லை. பானு கேட்கிறேன்."

"ஜெஸ். சொறி மிஸ் பானுமதி. நான் எந்தக் கோட்டையையும் பிடிக்க யோசனையிலாழ்ந்திருக்கவில்லை. உங்களைப்பார்த்தால்தான் ஏதோ பெரிய கோட்டையைத் தாக்கச் செல்லும் கோலத்தில் புறப்பட்டிருக்கிறீர்கள்." என்றுன் புன்முறுவல் பூர்த்தவனுய்.

'நான் அப்படி ஒன்றும்...'என்றவள் நாணி நிலம் நோக்கி நின்றுள்.

மிஸ் பானுமதி! அதோ பாருங்கள். அந்த ரோஜாவைப் பாருங்கள்' என்றுன்.

அவளும் பார்த்தாள். அப்பொழுது தான் மொட்ட விழ்ந்து நின்ற மலரில் வண்டுகள் செய்யும் லீலா விநோதத்தை மெய் மறந்து பார்த்துக் கொண்டே நின்றுள்.

'என்ன? அப்படியே சொக்கிப் போய் விட்டீர்களா?' என்றுன் கேலியாக ரகுராமன்.

'அப்படியில்லை. மலரைப் பெண்ணுக்கும் வண்டை ஆணுக்கும் ஒப்பிட்டுப் பார்த்த அந்த அறிஞர்களைப் பற்றி நினைத்தேன்.'

'அதாவது ஆண் மலர் விட்டு மலர் தாவும் வண்டு... அப்படித்தானே?'

'ஆமாம். ஆனுல் அந்த வண்டு மட்டும் அந்த ரோஜாவையே சுற்றிக் கொண்டிருக்கிறது. இல்லையா?'

'தவறு! மிஸ் பானு. நீங்கள் நினைப்பது தவறு. கவிஞர்கள், கற்பனை வாதிகளின் அதிகப் பிரசங்கித்தனம் தான் வண்டிகள் மீது குற்றம் சுமத்துவது. பாவம்! அந்த அப்பாவி வண்டினங்கள். தங்கள் மீது இப்படியொரு அவமானம் சுமத்தப்பட்டிருக்கின்றது என்று அறிந்து கொள்ளும் சக்தியில்லாததால் ஆனந்தமாகத் திரிகின்றன. இல்லையெனில் தம் மீது குற்றம் சுமத்தியவர்களைக் கொலை செய்து விட்டுத்தான் மறு காரியம் பார்க்கும்." என்றுன்.

'ஏன் ரகு? உங்களை அப்படி நான் நினைக்கிறேன் என்று தானே இந்தப் பிரசங்கம்?'

'கிடையாது என்னை நீங்கள் எப்படி வேண்டுமானுலும் நினைக்கலாம் மிஸ் பானுமதி. நான் அது பற்றிக் கவலைப்பட்டதில்லை. கவலைப் படப்போவதுமில்லை. ஆனுல் நீங்கள் அன்று அம்மாவிடம் கூறியது ஞாபகமிருக்கா?'

'ஆமாம்.'

'அது போல இந்த வண்டினத்தின் மீது சுமத்தப்படும் பழிக்கும் அவை பொறுப்பல்ல என்பது அறிவியல், அதாவது விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் கண்டுள்ள உண்மை.

'ரகு! நீங்கள்...'

'நான் விஞ்ஞானம் படித்தவன் என்றுதான் நீங்கள் நினைக்கின்றீர்கள். அது வேறு பிரச்சினை. தாவர வியல் ஆராய்ச்சியாளர்கள் கூறும் உண்மையைத்தான் நான் கூறுகின்றேன். மலர்கள் அழகான வர்ணங்களைக் கொண்டு பூப்பதும் நறுந் தேனைச் சொரிவதும் ஏன் தெரியுமா? வண்டுகளைத் தம்பக்கம் இழிப்பதற்காகத் தான்.'

'இதனுல் மலருக்கு என்ன பலன்?'

'தேனுண்ணுவதற்காக மலருக்கு மலர் வண்டுகள் தாவும் அதே வேளையில், மலர்களின் இனப்பெருக்கத்திற்கும் அவை துணைக் காரணிகளாகுகின்றன. அந்த உதவிக்கு நன்றியாக வண்டுகளுக்குத் தேனை அளிக்கின்றன மலர்கள். புரிகின்றதா?'

'ரகு! நீங்கள் எதையும் ஆராய்ச்சிக் கண்ணேடுதான் நோக்குகிறீர்கள்.'

'மேலெழுந்த வாரியாகப் பார்... [illegible] ...களைகள் தோன்றுகின்றன; அதே வேளையில் சில மலர்கள் பார்க்க அழகில்லையென்றுலும் நறுமணம் மிக்கதாகவும், சில அழகுள்ளவையாக ஆனுல் மணமில்லாததாகவும் இருக்கின்றன. அவை தமது கவர்ச்சிகளைக் காட்டியே...'

'போதும் ரகு போதும். நீங்கள் வேண்டுமென்றே என்னை...' என்று கூறும் பொழுது, அவள் விழிகளில் நீர்மல்கி நின்றன. பனியில் நனைந்து துடிக்கும் மலர் இதழ்கள் போன்று அவள் கண் இமைகள் துடித்தன.

'மிஸ் பானுமதி! நான் வேண்டுமென்று எதுவும் கூறவில்லை. ஒரு விடயத்தை எடுத்துக் கொண்டால் அதிலேயே மூழ்கி விடுகின்றேன். மன்னித்துவிடுங்கள். ஆமாம் நான் உங்கள் மனம் நோக ஏதும் கூறியிருந்தால் மன்னித்து விடுங்கள்.'

'ரகு! என்னிடம் எதற்காக இந்த மன்னிப்பும் மரியாதைகளும்?'

'என்னைப் பொறுத்த மட்டில் என்னுல் திடீரென அன்பு காட்டவோ, திடீரென வெறுக்கவோ முடியாது. அன்பின் நெருக்கம் மரியாதைகளைக் குறைத்து விடலாம், ஆனுல் விரைவில் நெருங்கவும், விரைவில் விலகவும் எனக்குத் தெரியாததினுல் மரியாதை காட்டுவதில் ஓர் உறுதியான உத்தியில் நின்று கொண்டிருக்கிறேன்.

'எனக்கு மன்னிப்பே கிடையாதா?'

'ஏன்? நீங்கள் எனக்கு ஒரு தவறும் செய்ததில்லையே. நான் எதற்காக மன்னிக்க வேண்டும்?'

நான் உங்களை முன்பு தவருக நினைத்தேன். தவருகக் கதைத்தேன். தவருக...'

'மிஸ் பானுமதி! நடந்தது என்னவென்பதைப் பற்றி நினைப்பது முட்டாள்தனம். எந்த ஒரு மனிதனைப்பற்றியும் எடைபோடுவது அவனுடைய கடந்தகால வாழ்வை வைத்தல்ல. அப்படி நினைத்துப் பார்த்தால் பெரிய பெரிய மகான்களும், ஞானிகளும் கூடச் சமூகத்துக்கு உதவாத மனிதர்களாகி விடுவார்கள். ஒருவன் எப்படி வாழ்ந்தான், வளர்ந்தான், என்பதை மறந்து விட்டு, அவன் எப்படி வாழ்கிறுன், செல்கிறுன் என்பதைப் பொறுத்தே அவன் நல்லவனு கெட்டவனு என்று எடை போட வேண்டும். நான் சொல்வது உங்களுக்குப் புரிகின்றதா?'

'புரிகின்றது ரகு. ஒரு சிறு வேண்டுகோள்."

'சொல்லுங்கள்.'

'உங்கள் மைத்துனர் அதாவது பாரதியின் கணவர் வருகின்றுராமே?'

'ஆமாம். வருகிற புதன் கிழமை.'

'அதற்கு முன் பாரதியும் நானும் சினிமா ஒன்று பார்க்கலாம் என்று நினைக்கிறேன்."

'அதற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?'

'நீங்களும் எங்கள்கூட வர வேண்டும் என்றுதான் கேட்டேன்.'

'ஒகே. தங்கியூ. கரும்பு தின்னக் கூலியா? செலவு உங்கள் பொறுப்பா? என் பொறுப்பா?'

'நான்தானே உங்களைக் கேட்டேன். ஆகவே என் பொறுப்பு. நீங்கள் அழைத்தால் உங்கள்...'

'நான் அழைத்தால்...நான் ...நான் அழைத்தால் நீங்கள் வருவீர்களா?' என்றுன் ஆச்சரியத்துடன்.

'நிச்சயமாக வருவேன் ரகு."

'அப்படியானுல் நான் அழைக்கப் போவதில்லை' என்று கூறிவிட்டு, 'நான் உடைமாற்றிக் கொண்டு வருகிறேன்' என்று உள்ளே சென்றுன்.

ரகுராமன் உடைமாற்றிக் கொண்டு வெளியே வருவதற்கும், வெளி வாசலில் காரொன்று வந்து நிற்பதற்கும் சரியான பொருத்தமாகவே இருந்தது. காரைக் கண்டதும் ரகு அங்கே சென்றுன். ரோஸியுடன் வேறொரு அழகான பெண்ணும் காரிலிருந்து இறங்கினுள்.

'ஹலோ ரோஸி! இது...... யார்?' என்றுன்.

'ரகு! இவள்தான் நான் சொன்னேனே எட்லின் என்னுடைய 'ஸிஸ்டர் இன் லோ'

(11-ம் பக்கம் பார்க்க)

## கோச்சியிலே ஓர் இரவு!

(சிம்சன்)

கொடிகாமம் மேடையிலே கோச்சிக்குக் காத்திருந்தேன்
கொழும்புக்குப் போகவேண்டும் இன்ரவியூ நாளைக்கு
கூடிநின்ற மக்களுக்குக் குறைவில்லைத் தாணிங்கே
கால் கடுக்க நிற்கின்றேன் கோச்சியோ வரவில்லை
தாமதமாய் வந்ததுவே தபால் வண்டி தானதுவே
தேடிவந்த மாப்பிளையை நாடி வரவேற்றுமே
ஏறுவதற்கேராளம் இறங்குவதற்காருமில்லை
என் செய்வேன் என் செய்வேன் 'சீற்' ஒன்று வேணுமங்கே
ஓடியே ஏறுகின்றேன் ஓர் 'சீற்'றில் அமர்கின்றேன்
ஒழுங்காக இருந்த பின்னே எதிர்ப்பக்கம் பார்க்கின்றேன்
எழிலரசி ஓர் குமரி என்னெதிரே இருக்கின்றுள்
என் மனமும் மகிழ்ந்ததுவே எதிர்திசையைப் பார்த்தவுடன்
சிற்றிடையாள் சிரிக்கின்றுள், சிரிக்கின்றேன் பதிலுக்கு
சிலநேரம் சென்ற பின்பு சிந்தனைகள் தடைப்படவே
கண்களையே திருப்புகின்றேன் கன்னியவள் திசையினிற்கு
காளையும் பார்க்கின்றுன் கூச்சமின்றி என் முகத்தை
மணி நேரம் சென்ற பின்னே புன்னகைகள் புரிந்தவுடன்
மனம் திறந்து பேசுகிறேன், மகிழ்வோடு கலந்துகொண்டாள்
வழியெல்லாம் பேச்சுக்கள் வளர்ந்துகொண்டே சென்றனவே
வனிதையவள் பேச்சினிலே மனம் மயங்கி நானிருந்தேன்
இரவுநேரமாதலினுல் இங்குமங்கும் உறங்குகின்றுர்
இரவு சென்றும் தூங்கவில்லை இனியவளின் சேர்க்கையினுல்
விடிவெள்ளி வந்ததினுல் வியப்புடனே பார்க்கின்றேம்
விழிப்புடனே கேளுங்கள் வியப்பொன்றுமிதிலில்லை
இரு பெண்கள் சேர்ந்துவிட்டால் இது பெரிய நேரமல்ல
இனிமையான பிரயாணம் இளம் பெண்கள் எமக்கதுவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இதயங்களிலிருந்து வடியும்

# இரத்தக் கண்ணீர்!

அன்புள்ள ஆசிரியருக்கு,

'இறைவா, கொஞ்சம் கருணைகாட்டு, எங்கள் டாக்டரை வாழவிடு' — என்ற தலைப்பில் நீங்கள் தந்த அரசியல் மடல் டாக்டர் அவர்களை கொழும்பு பெரியாஸ் பத்திரியில் இருந்து நேரடியாக எனது முன் கொண்டு வந்துவிட்டது போல் இருந்தது.

திகிலூட்டும் அம்மடலைப் படித்த என் கண்களில் என்னையும் அறியாமல் மடை திறந்த வெள்ளம்போல் கண்ணீர் பெருக்கெடுத்தது. நெஞ்சமோ ஏதோ பெரும் பாரத்தைத் தாங்கிக்கொள்வது போல அவஸ்தைப்பட்டது.

எங்கள் டாக்டருக்கு ஏன் இவ்வளவு கொடிய கடுமையான நோய் வரவேண்டும் என்று என் மனதில் புழுங்கிக்கொண்டு கவலையுடன் இருந்த எனக்குத் திடீரென வானொலியிலிருந்து வெளிவந்த செய்தி திடுக்கிடவைத்தது; வானொலி தவறுதலாக ஏதாவது புலம்புகின்றதோ என எண்ணினேன். பின் என் காதுகள்தான் தவறுதலாகத் தன் தொழிலைச் செய்யத் தொடங்கிவிட்டதோ என எண்ணினேன் மீண்டும் அதே போன்று வானொலியில் ஒலித்தது. ஆம் அது டாக்டர் பூவுலகை விட்டுப் பிரிந்து விட்டார்என்றசெய்திதான்.

ஐயோ என வாய்விட்டலறினேன்: நான் இருக்குமிடத்தை மறந்தேன். மீண்டும் சுயநினைவிற்கு வந்து ஏதேதோ புலம்பினேன். கண்ணீர் விட்டேன்: ஐயோ! நம் ஈழத் தமிழ் நாட்டின் அருந்தவப் புதல்வனே! தமிழ்ச் சமுதாயத்தின் அணையா ஜோதியே! தமிழரின் சுதந்திரத்திற்காக களம் பல கண்ட மாவீரனே! தமிழ் இன விடுதலைக்காகப் போர் தொடுத்த அஞ்சாத சிங்கமே! அணையாச் சுடர் ஒளியே! காவலனே உன் பெயர் கேட்டால் எதிரிகள் நடுங்குவார்களே! தூற்றும் எதிரிகளின் கொட்டம் அடக்கினாயே!

மொழி உரிமை பறிபோயிற்றே என்று சிங்களக் காடையர் மத்தியில் அறப்போர் தொடுத்தாயே! தமிழ்த்தாயின் மானம் காற்றிலே பறக்கவிடாமல் காப்பாற்றிய தீரனே! யாழ் நகரில் தமிழரசாரால் நடாத்திய சத்தியாக்கிரகப் போரிலே இராணுவப் படைக்கோ, பொலிஸ் படைக்கோ எப்படைக்கும் தயங்காமல் தமிழர் படைதிரட்டி ஏற்றமிகு சுதந்திரமாம் தமிழர்க்கு விடுதலை வேண்டுமென அறைகூவல் விடுத்து குண்டாந் தடிக்கோ, துப்பாக்கிக்கோ தயங்காமல் நேர் நின்று போராடி இன்னல்கள் பல தாங்கி வென்று வந்த தமிழ் மகனே! இரும்பு மனிதன் என்று எதிரிகளே கூறுமளவிற்கு வீரம் நிறைந்த உன் உடலையே அர்ப்பணித்த எம் தமிழ்ச் செம்மலே!

உன் வீரம் நிறைந்த நெஞ்சம் எங்கே? தீரம் நிறைந்த தோள்கள் எங்கே? தமிழ்த் தாய்க்கு இன்னல் என்றால் முன் ஓடித் தலைகொடுப்பாயே! உன் இரும்புத்தலையெங்கே? ஆற்றல் மிகுந்த நெற்றி எங்கே? கம்பீரமும் மிடுக்கும் நிறைந்த உன் துள்ளு நடையெங்கே? ஏன் ஓய்ந்துவிட்டாய்?

"நான் தமிழன்னைக்குச் செய்யவேண்டிய கடமைகள் எல்லாம் செய்து முடித்துவிட்டேன். இனி என்ன" என்ற இறுமாப்பா உனக்கு? ஏன் பேசாமல் தூங்குகின்றாய்? ஓ! நீதானே இப் பூவுலகை விட்டுப் போய்விட்டாயே! நீ பறந்து விட்டாய் என்று தமிழன்னை மட்டுமா புலம்புகின்றாள்: இல்லை அவளுடன் உன் தமிழ்ச் சகோதரருமல்லவா கதறுகின்றார்கள்: இதையாவது யோசித்தாயா!

ஐயய்யோ! தமிழ் மக்கள் தற்பொழுது நடுக்கடலில் தத்தளித்து நாதியற்ற நிலையில் கலங்கித் தவிக்கையில் எம்மிடமிருந்த நற் தமிழ் காவலனையும் கவர்ந்து விட்டாயே இறைவா! அவர்களை என்ன அப்படியே சாகவா சொல்கிறாய்? தமிழ்ச் சமுதாயம் சுதந்திரமாக வாழ்வது கூடவா உனக்குப் பிடிக்கவில்லை?

ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழ்க் காவலனின் பிரிவால் மனம் நொந்து வெளிவிடும் பெருமூச்சு இறந்த அவரின் திண்ணிய உடலில் பட்டு தென்றலாக மாறட்டும். ஒவ்வொரு தமிழ்ப்பெண்ணும் தம் கண்களிலிருந்து விடும் கண்ணீர் அவரின் செந்நிற மேனியிலே விழுந்து காவிரி நதியாக மாறட்டும்: இப் பூவுலகை விட்டு அவர் பூத உடல் மறைந்தது என்னவோ உண்மைதான்: ஆனால் அவர் புகழ் தமிழினத்தின் நெஞ்சங்களை விட்டு அகலவே அகலாது.

—த. பரராசசிங்கம்,
சண்டிலிப்பாய்.

## புனிதன் புகுந்த இடமெங்கே?

தன்னிகரற்ற தமிழ்த் தலைவர்—தமிழர் நெஞ்செல்லாம் நிறைந்திட்ட தமிழர்—வீரத் தமிழர்—விண்ணதிர மண்ணதிர முழங்கிடும் தமிழர்—மாண்புமிகு அறத்தமிழர் —துணிவின் சிகரம்—இரும்பு மனிதர் — அன்பின் உருவம் டாக்டர் நாகநாதன் காலமாகிவிட்டார் என்ற செய்தி நாளிதழ்கள் மூலம் கண்ணைத் துளைத்துக்கொண்டு நெஞ்சிலே புகுந்து நினைவை வாட்டுகிறது.

அரசியல் நாகரீகமும் அருந்தமிழ்ப் பற்றும் நிறைந்த ஒரு தமிழர் நம்மை விட்டுச் சென்றுவிட்டார். பதவிகளையும், பணத்தையும் எதிர்பார்த்து தமிழினத்தின் பண்பையெல்லாம் அடகு வைக்கும் பச்சோந்தித் தமிழர்களை தலைகுனிய வைத்து, தமிழர் தம் வரலாற்றில் மாசுபடவிடாமல் பண்டை வீரத்துடனும், பழந் தமிழ்ப் பண்புடனும் திகழ வைத்த செம்மல் —தமிழர் நெஞ்சிலெல்லாம் உணர்ச்சிக் கீற்றை எழுப்பிவிட்ட வள்ளல் காலமாகிவிட்டார். என்ன கொடுமையோ—ஏன் இந்த நட்டமோ புரட்சித் திட்டங்கள் புனைந்திடும் வேளையில் நம்மை விட்டு மறைந்திட்டார் நாகா.

விறல் வேந்தன் வன்னியனும், வீரம்மிகு இராஜவரோதயனும் வெற்றி தந்த தமிழ்த் தொண்டர்களும் தழுவிய வீரமரணத்தை நாகா பெற்றுவிட்டார். நல்லுள்ளம் கொண்ட செம்மல் —தமிழுள்ளம் கொண்ட அண்ணல்—வரலாறு போற்றும் வள்ளல் காலமாகிவிட்டார். ஏனிந்த கா[illegible]னுக்கு இவ்வளவு அவசரமோ! குரல் கொடுத்தால் உயிர் கொடுக்க காத்திருக்கும் தமிழ்த் தொண்டர்கள் எத்தனையோ பேரிருக்க வழி நடத்தும் மறத்தமிழன் நாகாவையா உனக்குதேவைப்பட்டது: அஞ்சாது, துஞ்சாது—யாரும் விஞ்சிடவும் முடியாது அன்புவழிப் போராட்டம் நடத்த இனி யார் வரப்போகிறார்கள்? அழகு தமிழுக்கு அணிசேர்த்து—அறிஞர் குழாத்திற்கு வழிகாட்டி பொருள் பொதிந்த போராட்ட வழி சமைந்த நாகநாதன் காலமாகி விட்டார்! நறுந்தமிழை வெறுத்தவர்க்கு நாக விடம் போன்றிருந்த நாகநாதன் காலமாகிவிட்டார்! வெறு முடலை மட்டும் காலதேவன், அழிக்க ஆவன செய்து விட்டான். ஆனால் அவனால் உயிர்த் துடிப்பான உணர்ச்சி மயமான வீர வரலாற்றை, வெற்றி வார்த்தைகளை அவனால் அழிக்கமுடியாது. அவையுள்ளவரை—தமிழ் உள்ளவரை—தமிழுணர்ச்சி இலங்கை வாழ் தமிழரிடம் உள்ளவரை—கார் உள்ளவரை — கடல் நீர் உள்ளவரை நாகாவின் நாமம் நமக்கெல்லாம் நலனும் தரும்: நல்ல பல வெற்றியையும் தரும். அண்ணல் ஆத்மா சாந்தியுறுக.

—காவலூரான்

கோவை அண்ணா!

எழுதவும் பேனா மறுக்கிறது. சற்று ஆறுதலாக சிந்தித்திடவும் முடியவில்லை: இன்று காலைப் பத்திரிகைகளைக் கண்ணுற்றேன், கவலையுற்றேன், பேரதிர்ச்சியடைந்தேன். எங்கள் தலைவன் நாகநாதனா இறந்தார் யார் சொன்னது? அது பொய், பொய்; நம்பிடவோ இதை? மாட்டேன் ஒரு காலும். தமிழ் மக்களின் தன்னிகரிலாத் தலைவன் மட்டுமா அவர், சுதந்திர விரும்பிகள் அனைவரதும் ஒளி விளக்கு; உரிமைகள் மறுக்கப்பட்டவர்களது இரட்சகர்; கட்சிக் கூட்டங்களில் வீரவுணர்வு ஊட்டும் விடுதலை வீரன்; அவர் இறந்து விட்டார் என்பது நிச்சயமாக அப்பட்டமான பொய். எப்படி அவர் மறைய முடியும். இன்னும் பன்னூறு தலைமுறைக்கும் உரித்தான தலைவன் மறைவானா? ஈழத்தமிழகத்தின் சரித்திரத்தில் தனி ஓர் அத்தியாயத்தை தனக்கென அமைத்த உத்தமன் எவ்வண்ணம் மறைவான்.

அண்ணா! நீங்கள் ஒரு திங்களின் முன் அவரிடம்சென்று பேசியபோது அஹிம்சையைவிட இன்னமும் ஒரு யுக்தி வேண்டும் என்று பகர்ந்ததாக எழுதினீர்களே. எல்லாம் கேட்டு வைத்தீர்களா? அவருடன் அவரது எதிர்காலத் திட்டங்களை மறையவிடாது செயலாக்கும் பொறுப்பு தமிழ் மகன் ஒவ்வொருவனதும் கடமையாகும்.

தமிழினத்துக்கு ஏனிந்த சாபக்கேடு. துரோகிகள் மடிவதில்லை; துப்பாக்கி முன் நெஞ்சைக் காட்டியவர்கள் மடிகிறார்கள். வால் பிடிக்கும் தாசர்கள் ஒழிகிறார்களில்லை; தமிழன்னையின் [illegible] துடிக்கிறார்களே; தமிழ்த் தாயை அரசேற்ற துடிக்கும் தனயர்கள் அடி வாங்குகிறார்கள், இடிபடுகிறார்கள், துப்பாக்கி ரவைகளால் பதம் பார்க்கப்படுகிறார்கள். அவர்களும் தாள் பிடித்தால் பல்லாண்டு வாழலாம் தானே; டாக்டர் தானுண்டு தன் குடும்பமுண்டு என்று வாழ்ந்தால் இன்னும் பல்லாண்டு வாழாரா? தமிழினமே சிந்தித்துப் பார்க்கவேண்டியவை இவை.

ஆம், வீ. ஏ. கந்தையாவை இழந்தோமே, வன்னியரை பறிகொடுத்தோமே, வரோதயரைப் பிரிந்தோமே, ஏகாம்பரத்தை இழந்தோமே. எல்லாம் எதற்காக? இறுதியாக டாக்டரை, எம்முயர் தலைவனை இழந்து பரிதவிக்கிறோமே எதற்காக? தமிழினமே சிந்தி. இனியாவது கவலை கொள்.

தமிழினத்தின் தலைவனை ஏழைத்தமிழ்மக்கள் பார்க்க வொட்டாமல் கொழும்பில் அடக்கம் செய்ததற்காக கவலையடைகிறோம். யாம் இறுதி அஞ்சலி செலுத்த முடியாமல் போய்விட்டது. டாக்டரது உடலுக்கு உரியவர்கள் நாமா இன்றேல் அவர் குடும்பமா? தயவு செய்து இனியாவது இது போன்ற தவறுகளுக்கு இடமளிக்கக்கூடாது என பணிவாகக் கேட்கிறேன். கலங்கிய நிலையில் வரைகிறேன்.

இறுதியாக டாக்டருக்காக, இறைவனை, எங்கும் நிறைந்தவரை, ஏகனை, எல்லாம் வல்லவரை அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டுமென பிரார்த்திக்கிறோம்.

—பொன். யேசுரத்தினம்
குடத்தனை.

அன்புக்குரிய அண்ணா,

வாலிபர்களின்உள்ளத்தில் என்றுமே மறக்க முடியாத வீர வாழ்வு வாழ்ந்து காட்டிவிட்டு இயற்கையோடு சங்கமம் ஆகிவிட்டார் டாக்டர் நாகநாதன் அவர்கள் ஆம் அது உண்மை. ஆனால்...!

அவர் எம்மை விட்டுப் பிரிந்து விட்டார் என்ற செய்தியை இன்னமும் என்னால் நம்பமுடியவில்லை. காரணம் நான் அவருடன் பழகிய பொழுது அவர் என்னிடம் கூறிய வார்த்தைகளும் அவர் என் மார்பில் தட்டிக் கொடுத்து ஊக்குவித்த சம்பவங்களும் நேற்றுத்தான் நடந்தது போல் இருக்கின்றது.

டாக்டர் அவர்கள் எம்மை விட்டுப் பிரிந்திருக்கலாம். ஆனால் அவர் நமக்கென்று விட்டுச் சென்ற அவருடைய நீங்காத நினைவுகள் என்றும் நம் நெஞ்சங்களில் நிறைந்த வண்ணமே இருக்கும்.

ஒரே ஒரு குறைமட்டும் எல்லோருடைய மனதிலும் உண்டு. அது தான் டாக்டர் அவர்களுடைய இறுதி யாத்திரையை யாழ் நகர மக்கள் காணக்கொடுத்து வைக்கவில்லையே என்று.

அதிகம் என்னால் எழுத முடியவில்லை காரணம் விழி நீர் என்பார்வையை மறைக்கின்றது.

—சி. முருகமூர்த்தி
உதவிச்செயலாளன் (வண்ணை தி. அ. வா. மு.)

அன்பின் அண்ணன்
கோவைக்கு;

சென்ற 13ம்தேதி வெளிவந்த சுதந்திரனில் தங்களால் எழுதப்பட்ட "இறைவா கொஞ்சம் கருணைகாட்டு -எங்கள் டாக்டரை வாழவிடு" என்ற மடலை வாசித்து வடித்த கண்ணீர் வற்றுவதற்கு இடையில் அதிர்ச்சி தரும் - தகவல் வெளிவந்தது எப்படி எப்படியெல்லாம் என் மனதைப் புண்படுத்தியது என்பதை அந்த டாக்டரைக்கொன்ற இறைவனுக்குத்தான் தெரியும்.

அண்ணா, இன்னும்தான் என் அழுகையை கட்டுப்படுத்தமுடியாமல் உள்ளது. எங்கள் தமிழினம் மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கும்போது எங்கள் தலைவர்கள் இருக்கிறார்களே—அவர்கள் வழிகாட்டுவார்கள் என்று ஆறுதல் அடையும் நேரத்தில் "போராடுவதற்கு என்றே" பிறந்த அந்தத் தலைவன்—தியாக மாமலை — இரும்பு மனிதன் எங்களையெல்லாம் தவிக்கவிட்டு வெகுதூரம் பறந்து சென்றுவிட்டான்.

பதவியைப் பெற்றதும் இயக்கத்தை உதைத்துத்தள்ளும் தமிழராகப்பிறந்த சிலர் இருக்கும்போது, தேர்தலில் சிறிது தோல்வியடைந்தும் அந்தத் தோல்வியைப்பற்றி எள்ளளவும் கவலைகொள்ளாது—மனத்தைத் தளரவிடாது தமிழினத்துக்கென்று வாழ்ந்த அந்த சிங்கத்தை நாம் பிரிந்துவிட்டோம்.

நல்லைக் கந்தன் திருவிழாவினை — தேரினை எல்லாம் பார்த்துக் களிப்படையமுடியாதபடி அவ்விடத்தை யெல்லாமே சோகமயமாக்கிவிட்டு எங்கள் தலைவன் மறைந்துவிட்டான். எத்தனை வாலிபர்கள் டாக்டர் ஐயாவுக்கு வருத்தம் சுகமடைந்தால் அங்கப் பிரதிஷ்டை—காவடி எடுக்க முடிவு செய்திருந்தார்கள். அந்த இளம் வாலிபர்களையும் கண்கள் குளமாக வைத்துவிட்டு அண்ணல் மறைந்துவிட்டான். எங்கள்தந்தை செல்வாவின், ஏன் தமிழினத்தின் வலதுகரம் — தமிழரசின் தூண் ஒன்று சரிந்து விட்டது.

கடந்ததேர்தலில் தாங்கள் விட்டதவறையுணர்ந்து அடுத்த சந்தர்ப்பத்திலாவது அதற்குப் பிராயச்சித்தம் தேடுவோம் என்று உறுதி கொண்டிருந்த நல்லூர்த் தொகுதி வாழ் தமிழ் மக்களையெல்லாம்—தன்னை, தன் இயக்கத்தை ஏமாற்றிய அந்த அப்பாவி மக்களை எல்லாம், தானே ஏமாற்றிவிட்டுத் தன் நண்பர்களான, வன்னியருடனும், இராஜவரோதயத்துடனும் ஏகாம்பரத்துடனும் வீ. ஏ. கந்தையாவுடனும் கைகோர்த்துக் கொண்டு தமிழர்கள் எதிர்காலம்பற்றி அதோ எங்கள் விறல்வேங்கை திட்டம் தீட்டுகிறான்.

ஐயா, "நாகா" பாரையா தமிழினத்தை; உம்மைப் பிரிந்து கதறும் செல்வாவையும், இராசமாணிக்கனாரையும் ஆலாலுவையும், தர்மரையும் பிறரையும்; தமிழினத்துக்கு உரிமை கிடைக்க, குழந்தையாகப் பிறந்து வளர்ந்து சேவையாற்ற ஓடிவா—ஐயா!

—ப. சோமசுந்தரம்
குப்பிழான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'முஜிபருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டால் வங்காள தேசமே பொங்கியெழும்'

'வங்கதேசபந்து ரகுமானின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் வங்காளதேசமே பொங்கியெழுந்து பழிக்குப்பழிவாங்கும். கடுமையான போர்செய்து மேற்கு பாகிஸ்தானையே அழித்து விடுவோம்.'

—இவ்வாறு வங்காள தேசத்தின் தற்காலிக ஜனாதிபதி சையத் நஸ்ருல் எச்சரித்துள்ளார். தற்போது வங்க நாட்டு ஜனாதிபதி ஷேக் முஜிபுர்ரகுமான் மீது மேற்குப் பாகிஸ்தான் இராணுவ அரசு விசாரணை நடத்த நடவடிக்கையெடுத்து வருவது தெரிந்ததே. இதுபற்றி வங்க தேசத்தின் தற்காலிக ஜனாதிபதி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:—

'பொது மக்களால், ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர், ரகுமான்: அவரை கைதுசெய்து—வழக்கு தொடர, பாகிஸ்தானுக்கு உரிமை கிடையாது.

ரகுமானுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டால், யாகியாகானின் மிருகவெறியின் உச்சக்கட்டமாக அது அமையும்.

இந்த வழக்கு ரகுமான் ஒருவர் மீது தொடரப்பட்ட வழக்காக நாங்கள் கருதவில்லை: வங்காள தேசத்தின் 7 கோடி மக்கள் மீது தொடரப்பட்ட வழக்கு. இது.

எனவே, ரகுமானுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டால், — வங்காள தேசமே பொங்கி எழுந்து, பழிக்குப்பழி வாங்கும் கடுமையான போர் செய்து மேற்கு பாகிஸ்தானையே அழித்து விடுவோம்.'

## சாவிலும் புதிய...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்வலம் அதோ, இடுகாட்டை அடைந்துவிட்டது! தேவாலயத்தில் கத்தோலிக்கப் பிரார்த்தனை முடிவடைந்தவுடன், அத்திருமகனின் பெருவுடலை, அவனது தோழர்கள் — தமிழரசுத்தலைவர்கள்—கைத்தாங்கலாக தாங்கியபடி, அவன் நிரந்தரமாகத் தூங்கப்போகும் குழிப் படுக்கைக்கு கொண்டுசெல்கிறார்கள்!

ஐயோ...ஐயோ...ஐயோ...

எங்கும் ஒரே அழுகை; சோக கீதம்!

மத சடங்குகள் முடிவடைகின்றன.

இப்போது......இதயத்தை சிலிர்த்திடவைக்கும் அந்த இறுதிக்கட்டம் வந்துவிட்டது!

நாளெல்லாம் நமக்காக உழைத்த அத்தலைமகனின் சடலம் குழிக்குள் இறக்கப்படுகிறது! அடிமைப் படுகுழியிலிருந்து நம்மை மீட்கப் போராடிய அந்த வீரத்தலைவன் நான்கு முழக் குழிக்குள் மெல்ல மெல்லப் போய்க் கொண்டிருக்கிறான்!

நிலமகள் அவனை அப்படியே முழுதாகவாரித் தழுவிக் கொள்ளுகிறாள்! அவள்தான் இந்தநிகழ்ச்சிக்காக எத்தனை நாள் காத்திருந்தாளோ?

அவளுக்கு இது இன்ப வேதனை; 35 இலட்சம் தமிழ் மக்களுக்கோ இது துன்ப வேதனை!

'நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க'— சிவ புராணம் ஓங்கி ஒலிக்கிறது!

ஒரு பிடி உரிமை 'மண்' அள்ளிப் போடுகிறார்கள் குழியில்... நம் உரிமைக்குப் போராடிய அச்சிங்கத்தின் சடலத்தின் மீது!

எல்லாமே முடிந்தது...!முடிந்துவிட்டது! ஒரு சரித்திர நாயகனின் சரித்திரத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு விட்டது!

'எங்கள் ஈழத் தமிழ்நாடு இசைவாழும் பொன்னாடு' தமிழ் தேசியகீதம் முழங்குகிறது. தமிழ் இதயங்களின் சோர்வினை அத்தேசிய கீதம் மெல்ல அகற்றுகிறது!

ஆம், அவன் மறைந்தாலும் அவனது இலட்சியங்கள் மறையாது! அவன் செத்தாலும், அவனது விடுதலை வெறி சாகாது!

தமிழன் நாட்டில் தமிழன் அரசு என்றோ ஒரு நாள் உருவாகியே தீரும்! அப்போது அவனது ஆத்மா மகிழ்ச்சியால் கூத்தாடத்தான் போகிறது!

இந்த எண்ணங்களுடன் இடுகாட்டைவிட்டு வெளியே வருகிறேன்.

## தேர்தல் செய்தி படத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜகஜீவன்ராம் மற்றும் வட இந்தியத் தலைவர்கள் நடத்திய தேர்தல் பிரசாரங்களும், காமராசர், இராஜாஜி, வி. கே. கிருஷ்ண மேனன் ஆகிய தென்னாட்டுத் தலைவர்கள் நடத்திய பிரசாரங்களும் இந்தியிலும், ஆங்கிலத்திலும் காட்டப்பட்டன.

ஆனால், தமிழ் நாட்டில் தி. மு. கழகம் நடத்திய பிரசாரக் கூட்டங்களைப் பற்றியோ, தி. மு. க. தலைவர்களைப் பற்றியோ ஒரு சிறு நிகழ்ச்சிதானும் இச்செய்திப் படத்தில் சேர்க்கப் படவில்லை. தமிழ் நாட்டை ஆளும் தி. மு. கழகம் பற்றி இப்படி வேண்டுமென்றே டெல்லி அரசு இருட்டடிப்பு செய்துவிட்டதாக இங்குள்ள தமிழர்கள் கருதவேண்டியுள்ளது.

## 'விடுதலைக்குப் போரா ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றும் அதற்கு மரியாதை செய்யுமுகமாகவே இலங்கை வந்ததும், தமிழரசுத் தந்தையை தாங்கள் முதன் முதல் சந்திக்க விரும்பியதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

வங்கதேசத்து மக்களின் பிரச்சினைகளையும், பாகிஸ்தான் அரசின் கொடுமைகளையும் உள்ள முருக்கும் வகையில் அவர்கள் தந்தையிடம் எடுத்துரைத்தனர்.

அவர்கள் கூறிய சோகக் கதையையெல்லாம் கலங்கிய கண்களுடன் கேட்டுக்கொண்டிருந்த தமிழரசுத்தந்தை அவர்கள், இறுதியில் மேற்கண்டவாறு அவர்களுக்கு உறுதி கூறி வழியனுப்பி வைத்தார்.

இருவர் பேசிக்கொள்வது என் செவிகளில் விழுகிறது—

''என்ன இருந்தாலும் கொழும்பில் — அயலான் ஊரில் இப்படியொரு பெரிய மரண ஊர்வலம் தமிழ்த் தலைவர் ஒருவருக்கு நடந்தது இதுதான் முதல் தடவை. தமிழரசுக் கொடிபறக்க, தமிழ் பாடல்கள் எங்கும் முழங்க, மாற்றார் மூக்கின் மேல் கை வைக்க நடந்த மாபெரும் ஊர்வலம் இது! டாக்டர் மீது தமிழ் மக்கள் கொண்டிருந்த அழியாத அன்புக்கு எடுத்துக்காட்டு இது.''

ஆம் அவர்கள் பேசிக் கொண்டது நூற்றுக்கு நூறு உண்மைதான்...!

சாவிலும் ஒரு புதிய சாதனையை சாதித்துக்காட்டி விட்டார் சரித்திர நாயகர் நாகநாதன்!

## நன்றிகெட்ட யாழ் மாநகர சபை!

தமிழினத்தின் நல்வாழ்வுக்காக தன் காலமெல்லாம் பாடுபட்ட அமரர் டாக்டர் நாகநாதனின் பேரிழப்பை அறிந்தவுடன் மட்டக்களப்பு மாநகர சபை கறுப்புக் கொடி ஏற்றி துக்கம் அனுட்டித்தது. மட்டுநகர் முழுவதும் கடைகள் மூடப்பட்டு கறுப்புக்கொடிகள் ஏற்றப் பட்டு இருந்தன. மட்டுநகர் மேயர் அனுதாபச்செய்தியும் விடுத்தார்.

இதேபோல திருமலை நகர சபையும் கறுப்புக்கொடி பறக்கவிட்டதுடன் விசேட கூட்டம் கூடி அனுதாபத்தீர்மானமும் நிறைவேற்றியது. நகர சபைத்தலைவரும், உறுப்பினர்களும் கொழும்பு வந்து நாகாவின் இறுதி ஊர்வலத்திலும் பங்குபற்றினர்.

யாழ்ப்பாணத்திலும், கடைகள் அனைத்தும் பூட்டப்பட்டு கறுப்புக்கொடிகள் ஏற்றப்பட்டு, நகரம் முழுவதும் வெறிச்சோடிக்கிடந்தது: ஆனல் நன்றிகெட்ட யாழ்: மாநகர சபை மட்டும், கறுப்புக்கொடி ஏற்றவுமில்லை; அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றவுமில்லை! யாழ் வரியிறுப்பாளர்களே, வாக்காளர்களே, இதற்கு நீங்கள் தரம்போகும் பதிலடி என்ன?

## தீக்குள் விரலை...

(9ம் பக்கத் தொடர்ச்சி)

எங்களுடனேயே வேலைசெய்யப் போகின்றான்.'

'வெறி கிளாட்' என்று கூறுமுன், 'ஹலோ' என்று அவன் கரம் பற்றிக் குலுக்கினுள் எட்லின்.

'ரகு! நீங்கள் ரெடியாய்ப் புறப்பட்டு நிற்கின்றீர்களே? எங்களுடன்வந்தால் என்ன?' என்றாள் அந்தப் பெண்.

'ஓகே:' என்றவன் அவளைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே 'யூ ஆர் வெறி பியூட்டிபுல்' என்றான்;

'தாங்கியூ' என்று அவளும் சிரித்தாள்.

தூரத்தில் நின்ற பானுஇத்தனையையும் பார்த்துக் கொண்டுதான் நின்றாள். ஆனால் அவன் அவளைத்திரும்பிக்கூட பார்க்காமல் அவர்களோடு காரிலேறி மறைந்து விட்டான். பானுமதியின் இதயத்தை யாரோ கசக்கிப் பிழிவது போன்றிருக்கவே, அவள் அழுதபடியே ஓடிச் சென்று [illegible] விழுந்து குமுறிக் குமுறி அழுதாள்.

## தமிழரசு கூட்டங்களுக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிதர வேண்டுமென்றும், ஒலிபெருக்கி உபயோகிக்கவும் அனுமதிக்க வேண்டும் என்றும் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு: அ. அமிர்தலிங்கம் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சரும், பிரதமருமான திருமதி பண்டாரநாயகாவுக்கு கடிதம் எழுதியிருந்தார்,

திரு. அமிர்தலிங்கத்துக்கு பிரதமரிடமிருந்து அனுப்பப் பட்டபதிலில், ஒலிபெருக்கியுடன் கூட்டங்கள் நடத்துவதற்கு அவசரகால நிலையின் கீழ் அனுமதிக்க முடியாது என்று தெரிவிக்கபட்டுள்ளது:

இறுதியாக கிடைத்த செய்தியின்படி அமரர் நாகநாதன் இரங்கற் கூட்டங்களை நடத்துவதற்கு தமிழரசுக் கட்சிக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது- 28-8-71 மாலை 5 மணிக்கு நாகா இரங்கற் கூட்டமொன்றை நல்லூர் முத்திரைச் சந்தை மைதானத்தில் தமிழரசுக் கட்சி நடத்துகிறது

## தலைநகரில் பங்ளா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரசுரங்களும் வெளியிடப் பட்டன.

பாகிஸ்தான் திரைப்பட விழா நிகழ்ந்த கொழும்பு சவோய் தியேட்டர் முன்பு இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

ஆர்ப்பாட்டத்தில் ஜனாப் ஏ. ஏ. லத்தீப், லங்கா சமசமாசக் கட்சியைச் சேர்ந்த பேனட் சொய்சா பா. உ., திருமதி குசலா அபயவர்தன பா. உ., திருமதிவிவியன்குணவர்தன, செல்வி சூரியாவிக்கிரமசிங்க, அமரதாச பெர்னாண்டோ ஆகியோரும் பங்குபற்றினர்.

அதே வேளையில் பாகிஸ்தான் திரைப் பட விழாவில் பிரதம விருந்தினர்களாக, சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் ஆர். எஸ். பெரேரா, பதியுதீன் மஹ்மூத், மைத்திரிபால சேனநாயகா ஆகியோர் கலந்து கொண்டது குறிப்பிடத் தக்கது.

## அமரர் நாகாவுக்கு மூதவை அஞ்சலி!

மறைந்த டாக்டர் நாகநாதன் அவர்களுக்கு 24-8-71ல் மூதவையில் அஞ்சலி செலுத்தப்பட்டது. இரு நிமிட நேரம் மூதவை உறுப்பினர்கள் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர்.

டாக்டரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றையும் மூதவை நிறைவேற்றியது. நாகாவின் பெரும் தன்மையையும், கொள்கை உறுதியையும், குணதிசயங்களையும் பாராட்டி, ஏ. பி. ஜெயசூரியா, விஜயமன்னே, கே. எம். பி. ராசரத்தின, செ. குமாரசூரியர், எம். திருச்செல்வம், எஸ். ஜேசுதாசன், ஏ. இரத்தினயகா ஆகியோர் உரை நிகழ்த்தினர். இந்த அனுதாபதீர்மானம் டாக்டரின் குடும்பத்தினர்க்கு அனுப்பி வைக்கப்பட்டது!

டாக்டர் நாகநாதன் தமது அரசியல் வாழ்வை மூதவை உறுப்பினராகவே தொடங்கியவர் என்பது தெரிந்ததே.

## சிங்களத்துக்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

விதங்களைப் பார்க்கும் பொழுது அரசாங்கக்கட்சி எதிர்க்கட்சி என்ற அடிப் படையில்தான் கருமங்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

மொழிப் பிரச்சினையைப் பொறுத்தளவிலே அது ஒரு முக்கியமான பிரச்சினை: அந்தப் பிரச்சினையை நீங்கள் எப்படித்தான்தீர்க்கப்போகிறீர்கள்? இதற்கு முன் விவாதிக்கப்பட்ட விடயங்கள் என்ன விதமாகத் தீர்மானிக்கப்பட்டனவோ அதைப்போல இதையும் தீர்க்கப்போகிறீர்கள் என்றால் நாங்கள் எதற்காக இங்கே இருக்க வேண்டும்?


# சுதந்திரன் வழங்கும் அண்ணா-வன்னியர் மலர்

19.9.71 சுதந்திரன் இதழ் அண்ணா— வன்னியர் நினைவு இதழாக வெளிவரவிருக்கிறது. இவ்விதழுக்கு கவிதை கட்டுரை அனுப்ப விரும்புவோர் 10.9.71க்கு முன்னர் அவற்றை அனுப்பி வைக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். —ஆசிரியர்.

# 'நினைவில் நிற்பவை'

டாக்டர் நாகநாதன் அவர்களைப் பற்றி 'கரிகாலன்' எழுதும் கட்டுரைத் தொடர் அடுத்தவார சுதந்திர னில் ஆரம்பமாகிறது!



''ஆடையலங்காரம் உன்னைப் பெருமகன் ஆக்காது. அறிவு உன்னைப் பெருமகன் ஆக்குகிறது.''

தர்மசக்கரம்

மில்க்வைற் நீல சோப், பார் சோப், சலவைப் பவுடர் ஆகியவற்றின் பாவித்த மேலுறைகளை சேகரித்து அனுப்பி அறிவு நூல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**

**த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


விரைவில் - சிலோன் என்டர்டெயின்மன்ட் திரைகளில் எதிர்பாருங்கள்

நடிகர் திலகத்தின் 150 வது வெற்றிப்படம்

பத்மஸ்ரீ சிவாஜி கணேசன் நடிக்கும்

மல்லியம் புரொடக்ஷன்ஸ் **சவாலே சமாளி** ஈஸ்ட்மன் கலர்

நாகேஷ், ஜெயலலிதா, வி. எஸ். ராகவன்
நம்பியார், விஜயகுமாரி, டி. கே. பகவதி - நடித்தது

டைரக்ஷன்: திரைக்கதை வசனம்:- மல்லியம் ராஜகோபால்.

---

இப்பொழுது ஜனத்திரள் நிறைந்த காட்சிகளுடன் காட்சியளிக்கின்றது

செல்லமகால் (கொட்டாஞ்சேனை)

கிறவுண் (மருதானை)

வின்சர் (யாழ்நகர்)

இம்பீரியல் (மட்டு நகர்)

ஜெமினி கணேஷன் (இரு வேடங்களில்)


பி. எஸ். வீரப்பா, நாகேஷ், கே. ஆர். விஜயா, நிர்மலா - நடித்த

கதை-திரைக்கதை-டைரக்ஷன் தாதா மிராசி **சங்கமம்** (ஈஸ்ட்மன் கலர்)

---

2 வது வெற்றிவாரம்

கெப்பிட்டல்-பிளாசா
லிடோ—வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)



நடிகர் திலகம் பத்மஸ்ரீ

**சிவாஜி கணேசன்**

மூன்று மாறுபட்ட வேடங்களில் நடித்து ஆஸ்கார் பரிசுப் போட்டியில் கலந்துகொள்வதற்காக அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்ட முதல் தமிழ்ச் சித்திரம். தென்னகத் திரைகளில் மாபெரும் சாதனையை நிலைநாட்டியது

மற்றும் ஜெயலலிதா, நாகேஷ், நம்பியார் நடித்த

சாந்தி பிலிம்ஸ்

**தெய்வ மகன்**

டைரக்ஷன்.
A. C. திருலோகசந்தர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ. இலக்கத்தில் ... ஆவணி மாதம் 29-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர் கோவை மகேசன்